
விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு

Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 04 செவ்வாய்க்கிழமை (17.03.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 088

# சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் ஏ-9 வீதி மக்கள் பாவனைக்கு!

## அமைச்சர் ஏக்கநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஏ-9 வீதியை எதிர்வரும் தமிழ்-சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் பொதுமக்களின் பாவனைக்காக திறந்து விட முடியும் என எதிர்பார்க்கின்றோம். அதற்கான நடவடிக்கைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் டி.பி.ஏக்கநாயக்க தெரிவித்தார். (12ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு தினங்களில் 1415 பேர் வருகை

### இராணுவம் தெரிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவிலிருந்து ஆயிரத்து 415 பேர் 14, 15ஆம் திகதிகளில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருகை தந்திருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் முல்லைத்தீவில் அமைக்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு வலயத்தில் வந்திருந்த (12ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன்துறை-திருமலை கப்பல் சேவை பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான கப்பல் சேவை ஒரு வார காலமாக மேற்கொள்ளப்படாததால் அவசர தேவைகளுக்காக தென்பகுதிக்கு செல்வோர் பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்குமான பயணிகள் போக்குவரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கிறீன் ஓசியன் கப்பல் வன்னியில் போரில் பாதிக்கப்பட்டோரை திருகோணமலைக்கு கொண்டு செல்லும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதால் யாழ். குடாநாட்டிற்கு செல்ல முடியாதுள்ளதாக திருகோணமலையில் காத்திருக்கும் நூற்றுக்கணக்கான பயணிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, யாழ். (12ஆம் பக்கம் பார்க்க)

## நலன்புரி நிலையங்களில் உள்ளவர்களுக்கு இந்து அமைப்புகளின் ஒன்றியத்தினால் 20 இலட்சம் பெறுமதியான பொருட்கள் உதவி

(யாழ்ப்பாணம்)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ். மாவட்டத்திலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கென சுமார் 20 இலட்

அமைப்புக்களின் ஒன்றியம் வழங்கியுள்ளது. இவ் உதவிப் பொருட்கள் நேற்றைய தினம் யாழ்.செயலகத்தில் வைத்து யாழ்.

## ஐ.நாவின் அறிக்கை சரியானது இலங்கைக்கு பேச்சாளர் பதில்

(ஜெனீவா)

போர் குற்றங்களை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் கலாநிதி நவநீதம்பிள்ளை தெரிவித்த கருத்

நவநீதம்பிள்ளையின் கருத்துக்கு இலங்கை அரசாங்கம் தனது கடுமையான எதிர்ப்பை தெரிவித்துள்ள நிலையில் ஐக்கிய நாடுகள் சபை அதற்கு பதில்கள் கொடுத்துள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை

நலன்புரி நிலையங்களில் உள்ளவர்களுக்கு

## இந்து அமைப்புகளின் ஒன்றியத்தினால் 20 இலட்சம் பெறுமதியான பொருட்கள் உதவி

(யாழ்ப்பாணம்)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ். மாவட்டத்திலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கென சுமார் 20இலட்சம் ரூபாய் பெறுமதியான உணவுப் பண்டங்கள் மற்றும் உடுபுடைவைகளை இந்து அமைப்புக்களின் ஒன்றியம் வழங்கியுள்ளது. இவ் உதவிப் பொருட்கள் நேற்றைய தினம் யாழ்.செயலகத்தில் வைத்து யாழ். அரச அதிபர் க.கணேஷிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் (12ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவின் அறிக்கை சரியானது இலங்கைக்கு பேச்சாளர் பதில்

(ஜெனீவா)

போர் குற்றங்களை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் கலாநிதி நவநீதம்பிள்ளை தெரிவித்த கருத்துக்கள் சரியானது என ஐ.நாவின் மனித உரிமை ஆணைக்குழு அலுவலகம் தெரிவித்துள்ளது.

நவநீதம்பிள்ளையின் கருத்துக்கு இலங்கை அரசாங்கம் தனது கடுமையான எதிர்ப்பை தெரிவித்துள்ள நிலையில் ஐக்கிய நாடுகள் சபை அதற்கு பதில்கள் கொடுத்துள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தின் பேச்சாளர் றூபெட் கொல்வில்லி தெரிவித்துள்ளதாவது, (12ஆம் பக்கம் பார்க்க)

## 20 தமிழ் இளைஞர்கள் கொழும்பில் கைது

(கொழும்பு)

கொழும்பில் வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை, மட்டக்குளி ஆகிய இடங்களில் நேற்று நடைபெற்ற சோதனை நடவடிக்கையில் 4 பெண்கள் உட்பட 20 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீதியால் நடந்து சென்றவர்களை வழிமறித்து விசாரணை நடத்திய பொலிஸாரும் ஊர்காவல் படையினரும் இவர்களை கைது செய்ததாக (12ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின் தன்னிச்சையான போர் நிறுத்தம்

## அமுலாகும் என்கிறார் பசில் எம்.பி.

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் தன்னிச்சையாக போர் நிறுத்தம் அமுல்படுத்தப்படும் எனவும் அதனைத் தவிர்ந்த வேறு எந்தப் போர் நிறுத்தம் குறித்த பேச்சுக்கே இடமில்லை எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் தமிழர்களது மனோ நிலைக்கும்,மோதலில் சிக்குண்டுள்ள தமிழர்களின் மனோ நிலைக்கும் இடையில் பெரிய இடைவெளி காணப்படுவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இது தொடர்பில் கொழும்பு ஊடகமொன்றில் வெளியான செய்தி வருமாறு, (12ஆம் பக்கம் பார்க்க)

## இருநாட்களில் 73 பொதுமக்கள் ஷெல் தாக்குதல்களில் உயிரிழப்பு

(வவுனியா)

வன்னிப் பெருநிலப்பரப்பில் மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகள் மீது நேற்று முன்தினம் வீழ்ந்துவெடித்த எறிகணைகளால் 73 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதுடன் 127 பேர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகளான மாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம் ஆகிய பகுதிகள் மீது நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆட்லறி எறிகணை, பல்குழல் வெடிகணை, மோட்டார் மற்றும் பீரங்கிகள் வீழ்ந்து வெடித்துள்ளன.

இதில் 62 (12ஆம் பக்கம் பார்க்க)


## முல்லைத்தீவிலிருந்து 440 பேர் நேற்று திருமலை சென்றடைந்தனர்

(கொழும்பு)

முல்லைத்தீவு புதுமாத்தளன் பிரதேசத்திலிருந்து 11-வது தடவையாக நேற்று கிறீன் ஓசியானிக் கப்பல் மூலம் 440 பேரை திருகோணமலைக்கு அனுப்பி வைத்துள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இலங்கைக்கான பேச்சாளர் சரசி விஜயரட்ண தெரிவித்துள்ளார்.

இவர்கள் நேரடியாக இந்திய வைத்தியர்கள் கடமையில் ஈடுபட்டிருக்கும் புல்மோட்டை மருத்துவ முகாமிற்கு அழைத்துச் செல்லப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவர்களில் காயமடைந்தவர்கள், நோயாளர்கள், (12ஆம் பக்கம் பார்க்க)

சிறுவர்களை மீட்போம்

சிறுவர் ஆட்சேர்ப்பை நிறுத்து

போருக்கு சிறுவர்களை ஆட்சேர்ப்பது இலங்கை மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு முரணானது. இந்தப் பிரச்சினையில் இலங்கை அரசாங்கம் பூரண எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதி செயலகம்

unicef


## ஈழத்தமிழர் படுகொலையைக் கண்டித்து தமிழ்நாட்டில் இருவர் தீக்குளிப்பு

(சென்னை)

ஈழத் தமிழர் படுகொலையை கண்டித்தும் உடனடியாக போர் நிறுத்தம் செய்யக் கோரியும் தமிழகத்தில் நேற்று முன்தினம் இருவர் தீக் குளித்தனர். இவர்களில் ஒருவர் பாட்டாளி மக்கள் கட்சியையும் மற்றொருவர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியையும் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக தமிழகத்தில் வெளியான செய்தி வருமாறு, அரியலூர் மாவட்டம் உடையார் பாளையத்தை அடுத்த தத்தனூர் கீழ விழியைச் சேர்ந்த பாட்டாளி மக்கள் கட்சியின் தொண்டரான இராஜசேகர் (வயது 30) ஈழத்தில் அப்பாவித் (12ஆம் பக்கம் பார்க்க)


இன்று முதல் வாடிக்கையாளர்களின் நலன் கருதி



4R-10/= மட்டுமே

மூர்த்தி டிஜிட்டல் கலர் லாப்

62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

பிரதான வீதி, நெல்லியடி.


(C-2197)


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்









வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்திலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்காக 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான உணவுப் பண்டங்கள் மற்றும் மருந்துப் பொருட்களை இந்து அமைப்புக்களின் ஒன்றியம் யாழ்.அரச அதிபரிடம் நேற்றுக் கையளித்தது. யாழ்.செயலகத்தில் நடந்த இந் நிகழ்வில் அரச அதிபர் உரையாற்றுவதையும், உதவிப் பொருட்களை நல்லை ஆதீன முதல்வர் அரச அதிபரிடம் கையளிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# பாதிப்படைந்த மக்களுக்கு உதவ இந்து அமைப்புகள் முன்வர வேண்டும்

## உதவி வழங்கும் நிகழ்வில் பேரா.சி.க.சிற்றம்பலம் அழைப்பு



(யாழ்ப்பாணம்)

அல்லல் படும் மக்களுக்கு உதவும் தார்மீக பணியின் அடிப்படையில் வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து யாழ்.மாவட்டத்தில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்காக இந்து அமைப்புகளின் ஒன்றியம் 20இலட்சம் ரூபாய் பெறுமதியான உணவுப் பொருட்கள் மற்றும் உடுபுடைவைகளை வழங்குகின்றது.

இவ்வாறு இந்துப் பேரவையின் தலைவரும், வரலாற்றுத் துறைப் பேராசிரியருமான சி.க.சிற்றம்பலம் தெரிவித்தார்.

இடம் பெயர்ந்த மக்களுக்காக இந்து அமைப்புகளின் ஒன்றிய்த்தினால் சேகரிக்கப்பட்ட உதவிப் பொருட்களை யாழ்.அரச அதிபரிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடந்த மேற்படி நிகழ்வில் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தொடர்ந்து உரையாற்றுகையில், வன்லியில் வசதியோடு வாழ்ந்த மக்கள் இப்போது நிர்க்கதியாகியுள்ளனர்.

பெற்றோர்களையிழந்து ஆதரவற்ற குழந்தைகளும் உள்ளனர். இவர்கள் மனோ ரீதியில் பாதிப்படையும் வாய்ப்பு உண்டு. இந்த நேரத்தில் மனிதாபிமான அடிப்படையில் உதவிகளை வழங்குவது எங்கள் ஒவ்வொரு வரினதும் கடமையாகும்.

இந்த மனித நேயப் பணியில் எவரும் பங்கு கொள்ளமுடியும். இந்து ஆலயங்கள், பொது அமைப்புக்கள், புத்திஜீவிகள், வர்த்தக பெருமக்கள் தங்கள் உதவிகளை வாரிவழங்குவதன் மூலம் பாதிப்படைந்த மக்களை ஆற்றுப்படுத்தமுடியும். இந்து சமயம் ஒரு வாழ்க்கை நெறி. அந்த நெறியைப் பேசுவதைவிட செயலுருவில் காட்டுவதே சிறந்தது.

அதன் ஒரு செயற்பாடாகவே இந்த உதவி வழங்கப்படுகிறது. யாழ்ப்பாண வர்த்தக பெருமக்கள் இந்த உதவியை வழங்கியிருந்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார். (ந)

## 80 இலங்கை மீனவர்கள் இந்.கடற்படையால் கைது

(கொழும்பு)

இந்திய கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த இலங்கை மீனவர்கள் 80 பேர் இந்திய கடலோர காவற்றுறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை இந்திய கடலோர காவற்றுறையினர் கைது செய்துள்ளதாக இந்தியாவிலுள்ள இலங்கைகான தூதுவர் ஜீ.எம்.ஹம்சா தெரிவித்தார்.

இந்த மீனவர்களுடன் 9 மீன்பிடிப் படகுகளும் கைபற்றப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். இவ்வாறு கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் நாடு திரும்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் இலங்கைத் தூதுவர் மேலும் குறிப்பிட்டார்.

(ச-5)

# சிறுமி படுகொலைச் சந்தேக நபரின் சடலத்தை பொறுப்பேற்க தாயார் மறுப்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் 6 வயது சிறுமி படுகொலை தொடர்பாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டு துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த பிரதான சந்தேகநபரின் சடலத்தை அவரது தாயார் அடையாளம் காட்டிய போதிலும் அதனைப் பொறுப்பேற்க மறுத்து விட்டார்.

நித்தியபுரத்தைச் சேர்ந்த ஒப்ரின் மேர்வின் ரினோசன் (வயது 26) என்ற இந்நபர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வைத்திய பரிசோதனைக்காகப் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்ட வேளை, பொலிஸ் அதிகாரி ஒருவரின் கழுத்தை நெரித்துத் தப்பியோட முயன்ற போது குறித்த பொலிஸ் அதிகாரியின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டதாகப் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம்மரணம் தொடர்பான விசாரணை நடைபெற்ற போது சாட்சியமளித்த சந்தேக நபரின் தாயார் கடந்த 3 வருடங்களாக இவருக்கும் குடும்பத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. கணவரை விட்டு பிரிந்து நான் வாழ்ந்து வருகின்றேன்.

இவரது சடலத்தை பொறுப்பேற்பதற்கும் நான் விரும்பவில்லை என குறிப்பிட்டார். சடலத்தை பொறுப்பேற்க தாயார் மறுத்ததையடுத்து அரச செலவில் அடக்கம் செய்யுமாறு மரண விசாரணையின் பின்பு பொலிஸாருக்கு மஜிஸ்திரேட் ரி.எல்.ஏ.மனாப் உத்தரவு பிறப்பித்தார். அதனையடுத்து அவரது சடலம் நேற்று அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

இச் சிறுமியின் கொலை தொடர்பாக விசாரணை மேற்கொண்ட திருகோணமலை பொலிஸ் தகவல்களின்படி, சந்தேகத்தின் பேரில் கைதானவர்களில் ஒருவர் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் மகன் என்றும் மற்றுமொருவர் தமிழ் அரசியல் கட்சி யொன்றுடன் தொடர்புடையவர் என்றும் மேலும் ஒருவர் கடந்த ஒரு மாத காலமாக சிறுமிக்குக் கணினி கற்பிப்பதற்காக வீட்டுக்கு சென்று வந்தவர் என்றும் தெரிய வருகின்றது. கணினி கற்பித்தவர் சிகரம் என்னும் இணைய வானொலி சேவையொன்றை நடத்தி வந்தவர் என்றும் தெரியவந்துள்ளது.

இச்சிறுமி உவர்மலையிலுள்ள தமிழ் அரசியல் கட்சியொன்றின் காரியாலயத்திலேயே தடுத்து வைக்கப்பட்டிருந்தமை மற்றும் இரண்டு சந்தேக நபர்களினால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளமை போன்ற தகவல்களும் தமது விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ள தாகப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவற்றைத் தவிர இந்தச் சந்தேக நபர்கள் திருகோணமலை பிரதேசத்தில் இடம் பெற்ற சில கடத்தல் மற்றும் கப்பம் கோரும் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று கண்டறியப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

அதேவேளை படுகொலை செய்யப்பட்ட சென்.மேரிஸ் மகளிர் பாடசாலையின் முதலாம் வகுப்பு மாணவியான ஜுட்ரெஜி வர்ஷாவின் பூதவுடல் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நல்லடக்கம் செய்யப்பட்டது. பாடசாலைமாணவர்கள்உட்பட பெருந்தொகையானோர் இதில் கலந்து கொண்டனர்.

(ச-5)

## இராணுவத்தின் மீது கைக்குண்டுத் தாக்குதல்!

நாயன்மார்க்கட்டுப் பகுதியில் இராணுவத்தின் உழவு இயந்திரம் மீது நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் கைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதல் சம்பவத்தில் ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்து எந்தவித தகவல்களும் வெளியாக வில்லை.

இதேவேளை குண்டுச் சத்தத்தை தொடர்ந்து சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக பிரதேச தகவல்கள் தெரிவித்தன. தாக்குதலுக்கு இலக்கான உழவு இயந்திரம் நேற்று சம்பவ இடத்தில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ச-5)

# வாகரையில் துப்பாக்கிச் சூடு நேற்று இருவர் உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேச காட்டுப்பகுதி ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் பலியான இருவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர் கள் எனத் தெரிவித்த பொலிஸார், அவர்கள் அடையாளம் காணப்படவில்லை என்றும் தெரிவித்தனர்.

வாகரைப் பிரதேத்தின் மதுரங்குளம் மற்றும் கட்டுமுறிவு போன்ற பகுதிகளுக்கு இடைப்பட்ட காட்டுப் பகுதியில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

குறித்த பகுதியில் விடுதலைப் பூலிகளின் நடமாட்டம் இருப்பதாக கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றினையடுத்து அங்கு சென்ற படையினர் அக்காடுகளில் பதுங்கி நின்றுள்ளதாகவும் அவ்வேளையில் ஆயுதம் தாங்கிய மூவர் அப்பகுதியால் செல்வதை அவதானித்த படையினர் அவர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நிலையில் இருவர் அவ்விடத்தில் உயிரிழந்துள்ளதுடன் மற்றவர் தம்வசம் வைத்திருந்த ரி-56 ரக துப்பாக்கியைப் போட்டுவிட்டுத்தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் மூன்று ரி-56 ரக துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பில் வாகரை பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-5)

## புலமைப்பரிசிலில் சித்தியடைந்த மாணவர்களை வாழ்த்தும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை -2008 இல் சித்திபெற்ற மற்றும் அண்மித்த புள்ளிகளை பெற்ற சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்களை வாழ்த்தும் நிகழ்வும் கல்லூரிச் செய்தி இதழான முகிழ் வெளியீட்டு விழாவும் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் உப அதிபர் கு .விமலன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலி. தென் மேற்கு பிரதேச சபை செயலர் திருமதி பு.சிவலிங்கம், கௌரவ விருந்தினராக வலிகாமம் கல்வி வலய தமிழ் உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி வி.கந்தையா, சிறப்பு விருந்தினராக ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி றூபா உதயரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-14)

# இன்று ஒரு தகவல்

## ஆறுவகை பயம்

"எதிர்காலத்தை நினைத்தால் எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது சேர்" என்று சொல்பவர்கள் பலர் இருக்கிறார்கள். பயப்படாத மனிதர்கள் யாருமே கிடையாது.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான பயம் இருந்தாலும் ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது மனிதனுக்கு ஆறு விதமான பய உணர்வுகள் வரலாமாம்.

எல்லாவிதமான பயமும் இந்த ஆறுவகைக்குள் அடக்கம். அந்த ஆறுவகை பயமும் ஆறு எதிரிகள் மாதிரி. ஆறு எதிரிகளையும் புரிந்து கொண்டால் வாழ்க்கையில் வெற்றியடைவது சுலபம்.

சரி அந்த ஆறுவகை பயமும் என்ன?

முதலில் வறுமை பற்றிய பயம்.

இரண்டாவது பழிச் சொல் பற்றிய பயம்.

மூன்றாவது உடல் நலம் பாதிப்பு பற்றிய பயம்.

நான்காவது காதல் தோல்வி.

ஐந்தாவது முதுமை.

ஆறாவது மரணம்.

பயப்படுவது என்பது ஒரு மன நிலைதான். இந்த மன நிலையைக் கட்டுப்படுத்த முடியும். திசை திருப்ப முடியும்.

வறுமை பற்றிய பயம் என்று முதலில் சொன்னோமே அந்த பயத்தின் அறிகுறி என்ன தெரியுமா?

எதிலும் அக்கறையில்லாமல் இருப்பது. ஒரு குறிக்கோள் இல்லாமல் இருப்பது. வறுமையை சகித்துக் கொள்வது.

வாழ்க்கையில் கிடைப்பது எதுவாக இருந்தாலும் ஆட்சேபனை இல்லாமல் ஏற்றுக் கொள்வது.

மனதாலும், உடலாலும் சோர்ந்து போய் இருப்பது ஆர்வம் – முனைப்பு – கற்பனைத்திறன் இவை எதுவுமே இல்லாமல் இருப்பது.

அடுத்தது, பழிச்சொல் பற்றிய பயம்.

அதாவது அடுத்தவர்கள் நம்மை குறை சொல்வார்களோ என்ற பயம்.

இதற்கான அறிகுறி என்ன தெரியுமா?

புதியவர்களைச் சந்திப்பதற்கு பயப்படுவது; முடிவெடுக்க முடியாமல் குழம்புவது, பிரச்சினைகளை தவிர்க்க விரும்புவது, தாழ்வு மனப்பான்மை, வரவுக்கு மேல் செலவு செய்து அந்தஸ்தை உயர்த்திக் கொள்வது, குறிக்கோள் இல்லாத வாழ்க்கை.

மூன்றாவது உடல் நலம் பாதிப்பு பற்றிய பயம். அதாவது நோய் பற்றிய பயம்.

ஒரு உண்மை என்ன தெரியுமா?

டாக்டரைச் சந்திப்பவர்களில் 75 சதவீதம் பேர் தங்களுக்கு நோய் வந்துவிட்டது என்ற கற்பனையில் இருப்பவர்கள் தானாம். இந்தப் பயத்தின் அறிகுறிகள் என்ன தெரியுமா?

நோய்க்கான அறிகுறிகள் தன்னிடம் தெரிவதாக நினைத்துக் கொள்வது. நோயைப் பற்றியே பேசிப் பேசி மனதை அங்கேயே வைத்துக் கொள்வது.

நோய் சம்பந்தமான செய்திகளைப் படித்து, நமக்கு இப்படி ஆகிவிடுமோ என்று வேதனைப்படுவது.

நான்காவது காதல் தோல்வி பற்றிய பயம். இது மிகவும் வேதனையானது. உடம்பையும் மனதையும் சீரழித்து விடும். ஆண்களைவிட பெண்கள் தான் இந்தப் பய உணர்வில் அதிகமாகப் பாதிக்கப்படுபவர்கள்.

ஐந்தாவது முதுமை பற்றிய பயம். வயதான காலத்தில் எப்படிச் சமாளிப்பது? சுதந்திரமாக செயல்பட முடியாதே என்ற நினைப்புகள்.

அடுத்தது மரணபயம். இது எல்லோருக்கும் பொதுவானது தான். தவிர்க்க முடியாத பயத்தை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் வேண்டும்.

உழைத்துப் பணம் சேர்க்க வேண்டும். உற்சாகமாக மனதை வைத்திருக்க வேண்டும். மனதைக் கட்டுப்படுத்த தெரிந்து கொண்டால் போதும். எல்லாம் சரியாக வந்து விடும்.

நம்ம ஆள் ஒருவன் சொன்னான். "சேர்... எனக்கு வறுமை பற்றிய பயம் தான் இருந்தது. ஒரே இரவில் 30 ஆயிரம் ரூபாய் தயார் பண்ணி விட்டேன். இப்பொழுது எனக்கு இன்னொரு பயம் வந்துவிட்டது!" என்றான்.

"என்ன பயம்?" என்றார்கள்.

"பொலிஸ் கண்டு பிடித்துவிடுமோ என்ற பயம்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# உரியவர்களிடம் கிடைக்கப் பெறாத வாகனப் பதிவுச் சான்றிதழ்கள்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் பதிவுத் தபால் மூலம் வாகன பதிவுச் சான்றிதழ்கள் மற்றும் வாகனப் பரிசோதனை தொடர்பான கடிதங்கள் என்பன வாகன உடமையாளர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தன.

உரியவர்கள் குறித்த முகவரியில் இல்லாத காரணத்தினால் தபாலில் விநியோகம் செய்யப்படாத வாகன பதிவுச் சான்றிதழ்கள் மற்றும் வாகனப் பரிசோதனை தொடர்பான கடிதங்கள் யாழ்ப்பாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளன.

உரியவர்கள் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் வாகன ஆவணங்களுடன் அலுவலக நாட்களில் நேரில் வந்து வாகன பதிவுச் சான்றிதழ் மற்றும் வாகனப் பரிசோதனை தொடர்பான கடிதங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். மோட்டார் போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர் வ. பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

வாகன பதிவுச் சான்றிதழ் விபரம் வருமாறு,

NP ME - 0763, த. கபிலேந்திரா – அளவெட்டி, NP GZ - 7502,சி. பிரபாகரன் – சண்டிலிப்பாய், NP MH - 8398, திருமதி. ச. கார்த்திகேசு – அரியாலை, NP HD - 3605,தே. ரவீந்திரன் – திருநெல்வேலி, NP GD - 3053, சா. விவியன் – யாழ்ப்பாணம், 83 Sri 5032, செ. சந்திரசேகரன் - காங்கேசன்துறை, EP GD - 9805, ரா. வேதநாயகம் – சாவகச்சேரி, 122 - 1157,சி. சிவநாதன் – சுன்னாகம், 3 Sri - 7843,பா. கேதீஸ்வரன் – கரவெட்டி, 500 - 6839.மு. சிவசுப்பிரமணியம் - சாவகச்சேரி, NP JG - 9893,பொ. பத்மகாந்தன் - வட்டுக்கோட்டை, 149 - 0127,கு. சிறிஸ்கந்தராஜா – சுன்னாகம்.

NP JP - 6030, செ. சிவரஞ்சன் - நாகர்கோவில், NP MH - 3934,சீ. றேமன் ஜெபரத்தினம் - குருநகர், NP GY - 9688,மு. எட்வேட்ரஞ்சித் - அம்பாலவணர் வீதி, உடுவில், சுன்னாகம், NP HE - 2095, கு. லோகப்பிரசன்னா - புன்னாலைக்கட்டுவன்.

NP MD - 7605,ப. சுரேஸ்குமார் - மல்லாகம், NP MH - 2944, NP MH - 2954,சமூக பொருளாதார தொழில்நுட்ப அபிவிருத்தி நிலையம் – 102, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**வாகன உடமை மாற்றம் தொடர்பான கடிதங்களுக்குரியோர் விபரம் வருமாறு,**

NP HV - 9208,கே. செல்லப்பா - கொக்குவில், NP JA - 3616,என். மனோ ரஞ்சன் - கொக்குவில், NP GU - 0992,கே. நயசீலன் - கொக்குவில், NP HC- 0429,ஆர். நகுலேஸ்வரன் - புன்னாலைக்கட்டுவன், 37 - 2034,ரி. பொன்னம்பலம் - மட்டுவில்,500 - 6723, இ. சின்னத்துரை – சாவகச்சேரி, NP JB - 8969, எம். எஸ். பரமேஸ்வரன் - சாவகச்சேரி.

500 - 2150, எஸ். சின்னக்குட்டி – சாவகச்சேரி, NP JY - 6598,செ. சுதா – சாவகச்சேரி, NP JZ - 6912, யு. லவகுமார் - சாவகச்சேரி, 28 - 1642, ரி. ரஞ்சித்குமார் – கைதடி.

NP JU - 9192, கே. மரியநாயகம் – நாவாந்துறை, NP GG - 9860,எம். முகுந்தன் - புதிய சந்தை, யாழ்ப்பாணம், NP GA - 8734, ஏ. அனுசியஸ் – பாசையூர், NP GA - 8784, ஜே. கே. பத்மநாபன் - யாழ்ப்பாணம், NP HT - 2172,ரி. சுரேஸ்குமார் – மட்டுவில் கிழக்கு, 500 - 7136,பி. தங்கத்துரை – மந்துவில் கிழக்கு.

30 - 9768,கே. திருமராஜா - சுன்னாகம், 136 - 1501, பி. கிருஸ்ணநாதன் – உடுவில் கிழக்கு, 9- 0750 டபிள்யூ. விநாயகரத்தினம் – வட்டுக்கோட்டை, NP HH - 3547, எஸ். சிறிதரன் – பலாலி கிழக்கு, 159 - 5813,எம். தற்பரநாதன் - வசாவிளான், 500 - 7117,என். ஜெயக்குமார் – மண்கும்பான், 53 - 2125, எஸ். ரவிக்குமார் ஏழாலை தெற்கு, 134 - 6288, எம். பொணன்டே – 4 ஆம் வட்டாரம், மண்டைதீவு.

500 - 4943, எஸ். குகேந்திரன் – மாட்டீன் றோட், 500 - 6086,வி. பொன்னம்பலம் - யாழ்ப்பாணம், NP MA - 2761, வி. ராகுலன் – நல்லூர், 500 - 8383, ஆர். தர்மலிங்கம் – யாழ்ப்பாணம், NP TQ - 9238, பி. சிறிபாஸ்கரன் - கல்வியங்காடு, NP JN - 4428, என். தர்மலிங்கம் – சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

NP HD - 7716, ஏ. பொணன்டே – நாவாந்துறை, 82 - 5241,கே. சிவபாலன் – புலோலி, NP HH - 5668, எல். பிரணவன் - யாழ்ப்பாணம், NP HB - 2088, எம். இராம்சாந்தி – மல்லாகம், NP HN - 7417, எஸ். ஏ. குமார் – மல்லாகம். (ஓ)



சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய உழவர் தின நிகழ்வில் மாணவர்கள் பொங்கல் செய்வதை படத்தில் காணலாம். அருகில் பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் காணப்படுகின்றனர்.

# இராசி பலன்

*17.03.2009*
*(பங்குனி 4, செவ்வாய்க்கிழமை)*
*சஷ்டி முற்பகல் 9.59 மணிவரை*
*அனுசம் பிற்பகல் 1.42 மணிவரை*
*இராகுகாலம் 3.19-4.49 மணிவரை*
*சுபநேரம் 10.49-12.19 மணிவரை*
**துன்னாலை வடக்கு ஆயில் நின்றெல்லைப் பிள்ளையார் கொடியேற்றம்**

| | |
|---|---|
| மேடம் | எதிர்பாராத அச்சம், உடல் நலக் குறைவு, காரியதாமதம், பிறருக்கு உதவுதல். |
| இடபம் | நண்பர்கள் சந்திப்பு, காரிய நன்மை, பொருள் சேர்க்கை, மனமகிழ்ச்சி. |
| மிதுனம் | அறிஞர்கள் பாராட்டு, சுக வாழ்வு, திடீர் பயணம், சத்துரு ஜெயம். |
| கடகம் | புத்திரரால் கவலை, பூர்வ புண்ணிய கருமம்,எடுத்த காரியம் தாமதமாகும், தனவிரயம். |
| சிங்கம் | சிந்தனை மிகுதி, உறவினர் வருகை, தொழில் ஆர்வம், சுபசெலவு. |
| கன்னி | கூட்டு முயற்சி,சகோதரர் உதவி, விருந்துபசாரம், கீர்த்தி. |
| துலாம் | பெரியோர் உதவி, கௌரவக் குறைவு, பணவிரயம், முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | தன்னம்பிக்கை, புதிய பொருள் சேர்க்கை, நண்பர்கள் உதவி, ஜனவசியம். |
| தனுசு | பிதாசிந்தை, உணர்ச்சி வசப்படல், வேலைச்சுமை, சயன சுகக்குறைவு. |
| மகரம் | தொழில் நன்மை, குடும்ப மகிழ்ச்சி, தெய்வ தரிசனம், பொருள் சேர்க்கை. |
| கும்பம் | சுபநிகழ்வு, தேகநலன், மேன்மை, செய்தொழில் விருத்தி. |
| மீனம் | கட்டுப்பாடு, அச்சமான நிலை, பிரயாணம், அதிக பிரயாசை. |

**வளவன்**

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 60 | 70-80 |
| பச்சைமிளகாய் | 50 | 60 |
| தக்காளி | 25 | 30 |
| அவரை | 20 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 |
| கோவா | 10 | 20 |
| கரட் | 40 | 50 |
| பூசணி | 20 | 20 |
| புடோல் | 15 | 20 |
| வாழைக்காய் | 80 | 90 |
| சின்ன வெங்காயம் | 35 | 35-40 |
| பெரிய வெங்காயம் | 40 | 50-60 |
| பாகற்காய் | 40 | 50 |
| வெண்டிக்காய் | 30 | 40 |
| கரணைக் கிழங்கு | 25 | 30 |
| பயிற்றங்காய் | 30 | 40 |
| லீக்ஸ் | 120 | 130 |
| போஞ்சி | 50 | 60 |
| கீரை – 1 பிடி | 10 | 15-20 |
| தேசிக்காய் | 140 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 30-35 | 35-40 |



யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த 4 ஆம் திகதி பாடசாலை அதிபர் திருமதி த.அ.துரைசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.குமாரசாமி ஆகியோர் உரையாற்றுவதையும், பிரதம விருந்தினர் மற்றும் யாழ்.பல்கலைக்கழக பதில் பதிவாளர் திருமதி சிவனேஸ்வரி குமாரசாமி ஆகியோர் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்குவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் மற்றும் பார்வையாளர்களையும் படங்களில் காணலாம்.

## மீள் நியமனம்

(வடமராட்சி)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் அலுவலக நிர்வாக உத்தியோகத்தர் த.பாலகிருஷ்ணபிள்ளைக்கு மேலும் ஒரு வருடம் மீள் நியனம் கிடைத்துள்ளது. (ஓ-10)

## நகர சபைக்கு உழவு இயந்திரம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகர சபைக்கு சுகாதாரப் பணிக்கென உழவு இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இந்த உழவு இயந்திரம் கைதடியில் அமைக்கப்பட்டுள்ள வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களின் சுகாதாரப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படவுள்ளதாக நகரசபைச் செயலாளர் திருமதி. கு. ஆறுமுகம் தெரிவித்தார். (ஓ-5)

## மாணவர்களின் நலன் கருதி மின்வெட்டு குறைக்கப்படுமா?

வடமராட்சியில் மின்வெட்டு நேரம் மேலும் அதிகரிக்கப்பட்டு வருவதினால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளதாக பெற்றோர் விசனமடைந்துள்ளனர். அடுத்த ஐந்து மாதங்களில் ஆகஸ்ட் மாதத்தில் உயர்தரப் பரீட்சை , புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் முன்னறிவித்தலற்ற சீரற்ற மின் விநியோகத்தினால் கல்வியைத் தொடர முடியாதிருப்பதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

வடமராட்சியில் கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து இரண்டு மணித்தியாலம் மின்வெட்டு இரவில் அமுல்படுத்தப்படுகிறது. முன்னர் ஒன்றரை மணித்தியாலங்கள் மின்வெட்டப்பட்டு வந்தபோதிலும் திடீரென வெள்ளிக்கிழமையிலிருந்து அரைமணித்தியாலம் மின்வெட்டு அதிகரித்துள்ளது. ஒரு நாளைக்கு 6.30 மணிக்கு வருகின்ற மின்வெட்டு 8.30 மணிவரை அமுல்படுத்தப்படுகிறது. மறுநாள் 8 மணிக்கு வரும் மின்வெட்டு பத்து மணி வரை அமுல்படுத்தப்படுகிறது. இந்த ஒழுங்கில் மாறி மாறி மின்வெட்டு அமுல்படுத்தப்படுகிறது. மாணவர்கள் படிக்கின்ற நேரத்தில் முழுமையாக மின்வெட்டப்படுவதினால் மாணவர்களின் கல்வி பாழடிக்கப்படுகிறது. சில நேரங்களில் காலையிலும் மின் வெட்டப்படுகிறது. இதனால் மாணவர்கள் மட்டுமல்ல மின் பாவனையாளர்கள் அனைவரும் விசனமடைகின்றனர். மின்வெட்டு நேரத்தைத் தவிர இரவுநேரங்களிலும் திடீர் திடீரென மின்சாரம் நின்று விடுவதால் மக்கள் சிரமத்திற்குள்ளாகின்றனர். (ஓ-10)

## வீதி திருத்தக் கோரிக்கை

(கோண்டாவில்)

கொக்குவில் கிழக்கு காளி கோயிலடி குறுக்கு வீதி பல வருடங்களாக திருத்தப்படாமல் உள்ளது.

மிக மோசமாக சேதமடைந்துள்ள இவ் வீதியை புனரமைப்பதற்காக மதிப்பீடுகள் மேற்கொள்வதற்கு என அதிகாரிகள் அடிக்கடி வருகைதந்து பார்வையிடுகிறார்களே தவிர புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

மழைகாலத்திற்கு முன்னர் இவ் வீதியை திருத்தித் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஓ-36)




## மூன்று வருடங்களாக புனரமைக்கப்படாதிருக்கும் பரு. சாவகச்சேரி பிரதான வீதியில் அமைந்துள்ள பாலங்கள்

(வடமராட்சி)

பருத்தித்துறை-சாவகச்சேரி பிரதான வீதியில் பாலம் ஒன்று உடைத்து மூன்று வருடங்களாக புனரமைக்கப்படாமல் அதனூடாக போக்குவரத்துச் செய்வோருக்கு ஆபத்தை உண்டு பண்ணும் வகையில் காணப்படுகிறது.

அந்த வீதியில் 9 ஆம் கிலோமீற்றர் பகுதியில் காணப்படும் பாலம் உடைக்கப்பட்டு திருத்த வேலைகள் எதுவுமே செய்யப்படாமல் இருப்பதனால் போக்குவரத்துச் செய்வோர் அபாய நிலையில் சென்று வருகின்றனர். அவ் வீதிக்கருகில் போடப்பட்டிருக்கும் மண் வீதி மழைகாலங்களில் ஆபத்தை உண்டு பண்ணி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை 8ஆவது கிலோமீற்றர் வீதியிலும் இரண்டு பாலங்கள் பழுதடைந்து காணப்படுகின்றன. இதில் ஒரு பாலம் உடைந்து துவாரங்கள் காணப்படுகின்றன.

இந் நிலையில் இவ்வீதியால் பயணம் செய்யும் வாகன ஓட்டிகள் பெரும் அச்சத்துடனேயே சென்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் சம்பந்தப்பட்டவர்கள் இனி மேலும் காலம் தாழ்த்தாது குறித்த பாலங்கள் மீது உடனடி கவனம் செலுத்தி பாலத்தை புனரமைத்துத் தருமாறு வாகன ஓட்டிகள் அவசர வேண்டுகை விடுகின்றனர். (ஓ-10)

## புனித அந்தோனியாரின் திருப்பாதச் சுவடுகள்

(மாதகல்)

மாதகல் புனித அந்தோனியார் ஆலயத்தில் கடந்த 3 ஆம் திகதி முதல் உள் ஆலயத்தில் வலம் வந்த புனித அந்தோனியாரின் திருப்பாதச் சுவடுகள் தென்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மறுநாள் மேலும் அதிகமாக காணப்பட்டதாகவும் இதை பெருந்திரளான மக்கள் பார்வையிட்டு செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-4)

## பயிற்சி நெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண சுகாதார அமைச்சினால் நடாத்தப்படும் பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தருக்கான ஒரு வருட அடிப்படைப் பயிற்சிநெறி எதிர்வரும் 19ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு பண்ணையில் அமைந்துள்ள சுகாதாரக் கிராமத்தில் உள்ள பிராந்திய பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ. ரவீந்திரன் பிரதம விருந்தினராகவும் வட மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.ஈ.ஞானசோதி சிறப்பு விருந்தினராகவும் கலந்து பயிற்சி நெறியை ஆரம்பிக்கவுள்ளனர். (ஓ)

## மனை முகாமைத்துவ பயிற்சி நெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலய முறைசாராக் கல்விப் பிரிவினரின் ஏற்பாட்டில் யுவதிகளுக்கான மனை முகாமைத்துவப் பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கல்லூரி அதிபர் திருமதி. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர் மு. இராமநாயகம், ஆசிரிய ஆலோச்கர் இ. ரவீந்திரன், செயற்றிட்ட உத்தியோகத்தர் ச. சிவானந்தன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ-7)

## நல்லொழுக்க நிறுவனத்தின் சிறுதொழில் முயற்சிக் கடன்

(வடமராட்சி)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் அப்பகுதியில் உள்ள வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் வருமானத்தைப் பெருக்குவதற்காக சிறுதொழில் முயற்சிக் கடன் வழங்கி வருவதாக வடமராட்சி நல்லொழுக்க நிறுவன இணைப்பாளர் ஆ.குலநாதன் தெரிவித்தார்.

அந்த வகையில் இவ் வருடத்தில் தை, மாசி மாதங்களில் முப்பது குடும்பங்களுக்கு 17 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இக் கடன் விவசாயம், ஆடு வளர்ப்பு, கோழிவளர்ப்பு, கடற்றொழில், சிறு வியாபாரம் போன்ற துறைகளில் ஈடுபடுவோருக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

இந் நிறுவனம் ஒரு வருடத்தில் 250 குடும்பங்களுக்கு இக் கடனை வழங்கவுள்ளது. கடன் பெறுபவர்கள் கிராம அங்கத்தவராகவும் நல்லொழுக்க நிறுவனத்தின் அங்கத்தவராகவும் இருக்க வேண்டுமென குறிப்பிடப்படுகின்றது.

இக் கடன் வழங்கும் நடை முறைக்கூடாக மக்கள் மத்தியில் ஒரு சேமிப்புப் பழக்கமும் உருவாகியுள்ளதென நிறுவன இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ஓ-10)

## அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை, புதிய கட்டடத் திறப்பு விழா எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி. விமலேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சுகாதார சுதேச வைத்தியத் துறை அமைச்சின் வட மாகாண செயலாளர் இ.இரவீந்திரன் கலந்துசிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி அ.எ.ஞானசோதி, யாழ்.அரச அதிபர் க.கணேஷ் , யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-4)

## மகளிருக்கான பயிற்சிநெறிகள்

(கோண்டாவில்)

நல்லூர் பிரதேச செயலகத்தினரால் ILO நிறுவனத்தின் அனுசரணையுடன் மகளிருக்கான தையல், கூந்தல்அலங்காரம் போன்ற பயிற்சிநெறிகள் J/116 கோண்டாவில் மேற்குப் பகுதியில் இம் மாதம் 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சிகளினால் மகளிருக்கான சுயதொழில் வாய்ப்பை அதிகரிப்பதே நோக்கம் என நல்லூர் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ். இரவீந்திரசர்மா தெரிவித்துள்ளார். (ஓ-36)

## நிர்வாகசபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தின் கலாசாரப்பேரவை நிர்வாக சபைக் கூட்டம் நாளை மறுநாள் வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக கலாசாரப் பேரவைத் தலைவரும் பிரதேச செயலருமான மரியதாசன் ஜெகூ தெரிவித்துள்ளார். (ஓ-30)

# இலங்கையில் தமிழர் 98

**ஹெள மக்களும் தமிழ் மக்களும்**
**பொ.ஆ.300-900**

தடாகம் மற்றும் ஏரி என்ற விகுதிப் பெயர் இலங்கையின் வேறுபாகங்களில் உள்ள குளங்களுக்கு இல்லையாகையால், வடகிழக்கில் பரவிய பல்லவர் செல்வாக்கை இவை பிரதிபலிக்கின்றன என்றும் இக் காலத்தில் இவற்றை அமைப்பதில் பல்லவ அரசிலிருந்து வந்த வணிக கணங்கள் பங்குகொண்டிருந்தன என்றும் ஊகிக்க இடமுண்டு.

இவ்வாறு வடக்கிலும் கிழக்கிலும் தொடர்ச்சியாகத் தமிழ்நாட்டிலிருந்து பரவிய செல்வாக்கு இப் பகுதிகளில் தமிழர் வலுவினைக் கூட்டி, ஏனைய இனக் குழுக்களை விட மேலோங்கிய குழுவாக அப் பிரதேசத்தில் தமிழ் இனக் குழு எழுச்சிபெற உதவியது. ஆனால் இலங்கையின் மத்திய பகுதியிலும் தென் பகுதியிலும் ஹெள இனக்குழு ஏனையவற்றை உள்ளடக்கி ஆதிக்கம் பெற்ற நிலையில் இருந்தது.

அனுராதபுரத்தில்தனது ஆதிக்கமையத்தை அமைத்திருந்த ஹெள இனக் குழு வடக்கிலும் தன் ஆதிக்கத்தை மேலோங்கச் செய்யக் கூடிய நிலையில் இருந்தது எனலாம். ஆதி வரலாற்றுக் காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து வந்த தாக்கத்தால் வலுவிழக்காது எழுச்சி பெற்ற ஹெள இனக்குழு, இலங்கை முழுவதிலும் ஆதிக்கம் பெறுமோ என்பது நிச்சயிக்கப்படாத நிலை இக்காலத்தில் காணப்பட்டது. இதனை இறுதியில் நிச்சயிக்கும் சக்திகள் துரிதமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தன. தமிழ்நாட்டில் பேரரசுகளின் எழுச்சியும் சைவ இயக்கத்தின் வெற்றியும் இலங்கையின வடக்கிலும் கிழக்கிலும் தமிழர் ஆதிக்கம் பெறுவதற்கும் ஹெள இனக் குழுவின் ஆதிக்கப் பரம்பலைத் தடுத்து நிறுத்துவ தற்கும் உதவின. இதனால் பத்தாம் நூற்றாண்டளவில் இலங்கையின் வட பாகத்தில் தமிழ் இனக்குழுவும் நடுப்பாகத்திலும் தென் பாகத்திலும் ஹெள இனக் குழுவும் ஆதிக்கம் பெறுவது பெருமளவு நிச்சயமாகிறது. சோழர் ஆட்சியுடன் பதினோராம் நூற்றாண்டில் இந் நிலை உறுதிபெற்றது.

**ஹெளவரும் தமிழரும்**
**உறுதிபெற்ற இனக்குழுக்கள்**
**900-1070**

இலங்கையில் வடக்கிலும் தெற்கிலும் 600க்கும் 900க்கும் இடையில் நடைபெற்ற வேறுபட்ட வளர்ச்சிகளின் விளைவுகள் பத்தாம்நூற்றாண்டில்தெளிவாகவெளிப்பட்டன.

இக்காலப் பகுதியில் இருள்மயமான சூழ் நிலையில் ஏற்பட்டுக் கொண்டிருந்த முக்கிய மான மாற்றங்களும் அபிவிருத்திகளும் தமிழ் இனக் குழுவும் ஹெள இனக் குழுவும் நாட்டில் எதிர்காலத்தில் அடைய இருந்த நிலையை நிச்சயித்தன. இந்நிலை 900 க்கும் 1070க்கும் இடையில் மேலும் மாற்றத்துக்கு இடமளிக்காத வகையில் உறுதியாகியது.

பத்தாம் நூற்றாண்டில் நாம் காண்பது என்ன? அரசியல் அரங்கில் தென்படுவது என்ன? நாட்டின் வடக்கையும் வடகிழக்கையும் பொறுத்தமட்டில் அனுராதபுரத்து மன்னார்களின் கட்டுப்பாடு அங்கு நிலவவில்லை. இதற்கு முற்பட்ட மூன்று நூற்றாண்டுகளிலும் நடந்ததுபோல தமிழ்நாட்டு மன்னர்களுடைய தாக்குதல்கள் வடக்கில் தொடர்ந்து நடைபெற்றன. முன்னர் பல்லவரும் பாண்டியரும் படையனுப்பியது போல, பத்தாம் நூற்றாண்டில் சோழர் வடக்கில் தாக்குதல்களை மேற்கொண்டனர். இவற்றின் விளைவாக இலங்கையின் வடபாகம் பத்தாம் நூற்றாண்டு முடிவடையுமுன் சோழர் ஆட்சிக்கு உட்பட்டது. ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் இரு பேரினக் குழுக்களுக்கு இடையில் படிப்படியாக வளர்ந்த போட்டி எவ்வாறு முடிவுறும் என்பதை நிர்ணயிக்கும் நிகழ்ச்சியாகச் சோழர் பெற்ற வெற்றி அமைந்தது.

**தென்னிந்தியப் பின்னணி - சோழர் எழுச்சி**

சங்க காலம் எனப் பொதுவாக வழங்கும் ஆதி வரலாற்றுக் காலத்தில் மூவேந்தர் என்னும் பொதுப் பெயரால் அறியப்படும் தமிழ்நாட்டு அரச வம்சங்களாகிய சேர, சோழ, பாண்டிய வம்சங்கள் மூன்றாம் நூற்றாண்டளவில் மறைந்து போக, வரலாறு தெளிவாகத் தென்படாத ஒரு நீண்ட வரலாற்றிரவு ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகளாக நீடித்தது. அதன்பின் ஆறாம் நூற்றாண்டின் முடிவில் இருந்து மூன்று நூற்றாண்டுகளாகத் தமிழ் நாட்டின் மேலாதிக்கத்தைப் பெற்ற வம்சங்களாகப் பல்லவரும் பாண்டியரும் முறையே வட தமிழ் நாட்டிலும் தென் தமிழ்நாட்டிலும் ஆட்சி செலுத்தினர். ஆனால் சோழரோ எங்கு சென்று மறைந்தனர் என்று தெரியாத நிலை ஒன்பதாம் நூற்றாண்டு வரை காணப்பட்டது.

ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் கால் தென்னிந்திய அரசியல் வரலாற்றில் சில அதி முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்ற காலமாகும். அவற்றுள் ஒன்றாகிய திருப் புறம்பியத்துப் போர் தமிழ்நாட்டின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. இப் போர் பல்லவருக்கும் பாண்டியருக்கும் இடையில் நடைபெற்றது.

பல்லவர் பக்கத்தில் கங்க வம்சத்தவரும் சோழ வம்சத்தவரும் போராடி, பாண்டியப் பேரரசன் வரகுணனைத் தோற்கடித்தனர். போரில் பல்லவ மன்னன் அபராஜிதன் வெற்றி பெற்றிருந்தாலும் பாண்டியரும் பல்லவரும் தமிழ்நாட்டு அரசியல் அரங்கில் வலுவிழப்பதற்கும் சோழர் எழுச்சி பெறுவதற்கும் அப் போர் வழிவகுத்தது என்றே கூற வேண்டும். அப்போரில் பல்லவருக்கு உதவிய முதலாம் ஆதித்த சோழன் வெகுவிரைவில் பல்லவரையும் தோற்கடித்துத் தொண்டை மண்டலத்தைச் சோழமண்டலத்துடன் இணைத்துக் கொண்டான்.

**சோழர் எழுச்சி**

ஆறு நூற்றாண்டுகளுக்கு மேலாக மறைவாக இருந்த சோழ வம்சத்தின் ஒரு கிளையினர் ஒன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் உறையூர்ப் பிரதேசத்திலிருந்து எழுச்சியைத் தொடங்கினர்.

பேராசிரியர்
**கா. இந்திரபாலா**

அங்கு ஆதிக்கம் பெற்ற விஜயாலய சோழன் தஞ்சாவூரைக் கைப்பற்றி அதனை ஆதிக்க மையமாகக் கொண்டு ஒரு புதிய பேரரசின் தோற்றத்துக்கு அடிக்கல் நாட்டினான். அவனும் அவன் பின் பதவி பெற்ற மகன் ஆதித்தசோழனும் பல்லவர் மேலாண்மையை ஏற்றிருந்தனர். ஆதித்தன் திரும்புறம்பியத்துப் போரில் பல்லவருக்கு உதவினான். ஆனால் பல்லவர் வலிமை குன்றிக் கொண்டு சென்றமை சோழர் எழுச்சிக்கு வாய்ப்பினைக் கொடுத்தது.

(தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா
## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

ஒபாமாவின் தாயை இந்தப் புதிய சூழல் வெகுவாகப் பாதித்தது. அப்போது அவளுக்கு பதினொன்று அல்லது பன்னிரண்டு வயதிருக்கும். மிகவும் கடுமையான ஆஸ்துமா நோயிலிருந்து விடுபட்டு ஒருவாறு வளர்ந்துள்ளாள்.

வருத்தம் அத்தோடு அடிக்கடி இடப்பெயர்வுகள் என்று இவையெல்லாம் அவளைத் தனிமைப்படுத்தியது.

உற்சாகமின்மை, சினத்தல், புத்தகத்துள் தன் தலையைப் புதைத்து வைத்தல், தன்னந்தனியாக உலாவல் என்று இன்னோரன்ன சேஷ்டைகள் அவளிடம் காணப்பட்டன.

இவைபற்றி தாயும் தந்தையும் கவலையடைந்தனர். நண்பர்கள் என்று மிகச் சிலரைத்தான் தன் புதிய பள்ளிக்கூடத்தில் மகளால் தேட முடிந்தது.


அவளுடைய பெயரை (ஸ்ரான்லி ஆன்) வைத்து மாணவிகள் கேலி செய்தனர்.

அவர்கள் ஈன இரக்கமின்றி அவளை ஸ்ரான் என்ற மனிதன், ஸ்ரான்லி ஸ்ரீமர் என்று அழைத்தார்கள். வழக்கமாகத் தன் வீடு திரும்பியதும் வீட்டு முன்றலில் புற்றரையில் படுத்து தன்னுடைய உலகில் சஞ்சரித்துக் கொண்டிருப்பாள்.

ஆனால் அன்று மாத்திரம் என்ன நடந்தது? வீட்டுக்கு வெளியில் பல பள்ளிக் குழந்தைகள் நிற்கிறார்கள். பாட்டி கிட்டச் சென்ற போது அவர்கள் பகிடி செய்து, நையாண்டி சிரிப்புடன் வெறுப்பும் கோபமும் வெளிப்பட உரத்த குரலில் கூக்குரல் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

*கறுப்பர்களின் காதலி*
*ஊத்தை அமெரிக்கர் (வடக்கு)*
*கறுப்பரின் காதலி*

பாட்டியைக் கண்ட மாத்திரத்தில் பிள்ளைகள் நாலாபக்கமும் சிதறி ஓடினர். அங்கே மகளும் அவரின் வயதொத்த ஒரு கறுப்புப் பெண் பிள்ளையும் புல்லின் மேல் அருகருகே குப்புறப்படுத்துக் கிடந்தனர். இருவரின் கண்களிலிருந்தும் கண்ணீர் வழிந்தோடி சூரிய ஒளியில் மின்னின. அவர்கள் பயத்தால் ஒடுங்கி அசைவற்றுக் கிடந்தனர். தாய் இருவரையும் ஒருங்கே அணைத்த வண்ணம் கூறினாள். “நீங்கள் விளையாட வேண்டுமானால், உள்ளே போய் விளையாடுங்கள் வாருங்கள் இருவரும்'' என்று கூறிக் கொண்டே கறுப்புப் பெண் பிள்ளையின் கையில் பிடிக்க முன் அவள் அந்த இடத்திலிருந்து ஓடி மறைந்தாள்.



அடுத்தநாள் தன் வேலைக்குப் போகாமல் தாத்தா அந்தப் பிள்ளைகள் படிக்கும் பாடசாலைக்குச் சென்று அதிபர் மூலம் பெற்றோர்களை அழைத்துப் பேசினார். அதற்கு அவர்களின் பதில்.

“ Mr. டன்ஹம்'' உங்கள் மகளுக்குச் சொல்லுங்கள். இந்தப் பட்டணத்தில் வெள்ளைப் பிள்ளைகள் கறுப்பர்களோடு விளையாடுவதில்லை'' என்றனர். தாத்தாவின் குடும்பம் ரெக்ஸாஸை விட்டு வெளியேறியதற்கு முக்கிய காரணம் இனத்துவேஷத்தோடு அங்கே வாழப் பிடிக்காததே.

ஆனால் ரூட்- பாட்டி கதையை வேறு மாதிரிக் கூறினார். தன் கணவன் தொழிலில் நன்றாக வரமுடியவில்லை.

அதனால்தான் புதிய பசுமை தேடி ஹவாய் வந்ததாகக் கூறினார்.

“நாங்கள் இருவரும் மனிதர்கள் எவராயினும் அவர்களை மரியாதையுடன் நடத்த வேண்டும் என விரும்பினோம். அவ்வளவு தான்'' என்று முடித்தாள்.

**18**

பாட்டி சொன்னால் அது எப்போதும் சரியாகத்தான் இருக்கும். அவள் எப்போதும் அளவுக்கு மீறி உணர்ச்சி வசப்படுவதை சந்தேகக் கண்கொண்டு பார்ப்பாள்.

அதே மாதிரித்தான் எதையும் அதிகப் படுத்தியும் கூறமாட்டாள். எதிலும் யதார்த்தத்தை கண்டு திருப்தியடைவாள்.

ஆகையினாற்றான் ஒபாமாவுக்கு பாட்டி கூறும் கதைகளில் நம்பிக்கை அதிகம்.

தாத்தாவுக்கும் ஒபாமாவின் தாய்க்கும் அதாவது தந்தைக்கும் மகளுக்கும் இடையில் உள்ள உறவில் விரிசல் ஏற்பட்டிருந்தது. ஹவாய்க்கு வரும்போது இருவரும் எதிலும் உடன்படவில்லை. அவரின் நிதானமின்மை, அடிக்கடி எதற்கெடுத்தாலும் எரிந்து விழுதல், காட்டுமிராண்டித்தனம் - இவற்றால் மகள் தந்தையை என்றுமே மன்னித்ததில்லை.

மகளின் நிச்சயதார்த்தம் நெருங்கிய போது அதை எதிர்க்காமல் இருந்துவிட்டார். ஆயினும் அவரின் அடிமனத்தில் கழிவிரக்கம் இருக்கத்தான் செய்தது.

உண்மை யில் எப்படி எங்கே கல்யாணம் நிகழ்ந்தது என்பது பற்றி மகனுக்கு இன்னும் தெரியாது. எந்தப் பதிவும் அகப்படவில்லை. கேக், மோதிரம் , கன்னிகாதானம் ஆகியன இல்லை. குடும்பங்கள் எதுவும் பங்குபற்றவில்லை.

**ஜம்பொன்**

சிறிய சிவில் கொண்டாட்டம். ஒரு சமாதான நீதவான்(J.P), பெற்றோர்கள் இக் கல்யாணம் இப்படித்தான் அமைய வேண்டும் என்று எண்ணினர் போலும்.இது ஒரு சோதனை. காலப்போக்கில் மறைந்து விடும்.வேண்டியது வாய் திறவாமல் இருத்தல் ஒன்றே.

(தொடரும்)

# சமரசத்திட்டத்தை ஏற்றார் சர்தாரி

# போராட்டத்தைக் கைவிட்டார் நவாஸ்

(இஸ்லாமபாத்)


பதவி நீக்கப்பட்ட பாகிஸ்தானின் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி இப்ஃதிகார் சௌத்திரியை மீண்டும் அப்பதவிக்கு நியமிக்க பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி இணங்கினார்.

வெளிநாடுகளின் சமரசத்திட்டத்திற்கு பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி இணங்கியதைத் தொடர்ந்து அரசாங்கத்திற்கு எதிராக நடத்தி வந்த ஆர்ப்பாட்டப் பேரணியை கைவிடுவதாக பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரும் பாகிஸ்தான் லீக் கட்சியின் தலைவருமான நவாஸ் செரீப் கைவிட்டார்.

தலைமை நீதிபதி இப்ஃதிகார் சௌத்திரி மீண்டும் பதவியில் சௌத்திரி மீண்டும் பதவியில் நியமிக்கப் படவேண்டும் . ஏனைய நீதிபதிகள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவேண்டும் போன்ற கோரிக்கைகளை முன் வைத்த நவாஸ்செரீப்பும் அவருடைய கட்சி ஆதரவாளர்களும் நாடளாவிய ரீதியில் நடைப்பயணம் போராட்டம் ஒன்றை ஆரம்பித்திருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களை கைது செய்யுமாறு பாகிஸ்தான் ஜனாதிபதி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதனைத்தொடர்ந்து முன்னாள் பாகிஸ்தான் கிரிக்கெட் அணித் தலைவரும் எதிர்க்கட்சி உறுப்பினருமான இம்ரான்கான் உட்பட பலர் கைது செய்யப்பட்டனர். எதிர்க்கட்சியினரின் ஆர்ப்பாட்டம் மற்றும் அவர்களின் கைதுகளைத் தொடர்ந்து பாகிஸ்தானில் பதற்ற நிலை தோன்றியது. இதனைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகள் சர்தாரியிடம் கோரிக்கை விடுத்தன.



எனினும் அதனை ஏற்றுக் கொள்ள அவர் முதலில் மறுப்புத் தெரிவித்தார்.

பின்னர் அதனை ஏற்றுக் கொண்டு தலைமை நீதிபதியை மீண்டும் பதவியில் இணைத்துக் கொள்வதற்கு இணக்கம் தெரிவித்தார்.

பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரிக்கும் பாகிஸ்தான் இராணுவத் தளபதிக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் பின்னரே சர்தாரி வெளி நாடுகளின் சமரசத்தை ஏற்றுக் கொள்ள இணக் கம் தெரிவித்தார்.இதற்கு முன்னர் பாகிஸ்தான் இராணுவத் தளபதிக்கும் பாகிஸ்தான் பிரதமர் யூசப் ரசா ஹிலானிக்கும் இடையில் சந்திப்பு ஒன்று நடைபெற்றது. வெளிநாடுகளின் சமரசத்திட்டத்தை சர்தாரி ஏற்றுக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் பதவியிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும் என இணக்கம் காணப்பட்டது.

ஜனாதிபதி பதவியிலிருந்து சர்தாரி நீக்கப்பட்டு அவரின் அதிகாரங்கள் பிரதமர் ஹிலானிக்கு வழங்கப்படும் என அந்தச் சந்திப்பில் இணக்கம் காணப்பட்டிருந்தது.

அதேநேரம் தலைமை நீதிபதி இப்ஃதிகார் சௌத்திரியை மீண்டும் பதவியில் இணைத்துக்கொள்வதற்கு சர்தாரி இணக்கம் தெரிவித்துள்ளமையை அமெரிக்கா வரவேற்றுள்ளது. (ஓ-6)

## இந்தியாவின் பதில்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

### பாகிஸ்தான் அறிவிப்பு

மும்பை தாக்குதல் சம்பவம் தொடர்பாக இந்தியா அளித்த பதில்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்காக உள்துறை அமைச்சகத்திடம் அனுப்பி வைக்கப்படும் என பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

மும்பை தாக்குதல் சம்பவம் குறித்து இந்தியா அளித்த ஆதாரங்கள் தொடர்பாக 30 கேள்விகளை பாகிஸ்தான் கேட்டிருந்தது.

இதற்கு இந்தியா விரிவான பதிலைத் தயாரித்து அதை புது டில்லியில் பாகிஸ்தான் தூதரக அதிகாரியிடம் கடந்த வெள்ளிக்கிழமை ஒப்படைத்தது.

இந்தியா அளித்துள்ள பதில்கள் உரிய மேல் நடவடிக்கைக்காக உள்துறை அமைச்சகத்திடம் அளிக்கப்படும் என வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் அப்துல் பாசித் சனிக்கிழமை தெரிவித்தார். (ஓ-6)

## பொருளாதார நெருக்கடி தொடர்பில் அமெ-ஐரோ. இடையே ஒற்றுமை

(லண்டன்)

உலகப்பொருளாதார நெருக்கடி தொடர்பாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து அமெரிக்காவும் ஐரோப்பாவும் பிளவுபட்டு நிற்கின்றன என்று வரும் செய்திகள் பெரிது படுத்தக்கூடியவை அல்ல என்று பிரித்தானிய பிரதமர் கோர்டன் பிரவுண் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் நடக்கவுள்ள பொருளாதார வளர்ச்சி கண்ட 20 நாடுகளின் மாநாட்டில் இப்பிளவு ஏற்படும் என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

நிதி நிறுவனங்கள் செயற்பாடுகள் என்பவற்றின் மீதான சட்டதிட்டங்கள் கட்டுப்பாடு ஒழுங்குகளை விரிவாக்க வேண்டும் என்ற ஐரோப்பிய நாடுகளின் கோரிக்கைக்கு அமெரிக்காவின் ஆதரவு கிடைக்கும் என்று தான் கருதுவதாக கோர்டன் பிரவுண் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# பாக்.மீதான எறிகணை தாக்குதல் தொடர்ந்து நடத்தப்படும்

## அமெரிக்க இராணுவத் தளபதி அறிவிப்பு

(வோஷிங்டன்)

பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதிகளின் முகாம்கள் மீதான ஏவுகணைத் தாக்குதலை நிறுத்த மாட்டோம் என்று அமெரிக்கா இராணுவத் தளபதி அட்மிரல் மைக் முல்லன் அறிவித்தார். ஆப்கானிஸ்தான் எல்லை அருகே பாகிஸ்தானின் பழங்குடி இனப் பகுதியில் தீவிரவாதிகள் முகாம்கள் அமைத்து தங்கி இருக்கிறார்கள்.

அங்கு இருந்தபடி அவர்கள் அடிக்கடி ஆப்கானிஸ்தானுக்குள் புகுந்து அமெரிக்க இராணுவம் மீது தாக்குதல் நடத்தி விட்டு தப்பி ஓடிவந்து விடுகிறார்கள். அவர்களை பாகிஸ்தான் இராணுவத்தால் கட்டுப்படுத்த முடியவில்லை. இதனால் அவர்களின் முகாம்கள் மீது அமெரிக்கா ஆள் இல்லாத போர் விமானம் மூலம் ஏவுகணை தாக்குதலை நடத்தி வருகிறது.


இந்தத் தாக்குதலை அமெரிக்கா கைவிட வேண்டும் என்றும் இந்தத் தாக்குதல்களில் பல முறை அப்பாவிகள் பலியாகி வருவதால் பாகிஸ்தான் மக்கள் அமெரிக்கா மீது கோபம் கொண்டு உள்ளனர் என்றும் பாகிஸ்தான் அரசு வலியுறுத்தி வருகிறது. இதை அமெரிக்கா ஏற்கவில்லை.

இதுபற்றி அமெரிக்க முப்படைகளின் கூட்டுத்தளபதி அட்மிரல் மைக் முல்லன் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில், "பாகிஸ்தான் மீதான ஏவுகணைத் தாக்குதலை அமெரிக்கா ஒருபோதும் கைவிடாது என்றும் தொடர்ந்து நடத்தும்" என்றும் அறிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், ஒபாமா நிர்வாகம் பாகிஸ்தான் தலைமையிடம் இதைத் தெளிவு படுத்தி விட்டது என்றும் அவர் குறிப்பிட்டார். (ஓ-5-6)

## உலக தரிசனம்

நேற்று முன்தினம் அமெரிக்காவின் கேப்கன வெரல் விண்வெளி ஏவுதளத்தில் இருந்து 7 விஞ்ஞானிகளுடன் விண்ணுக்குச் செலுத்தப்பட்ட விண்வெளி ஓடம்.



# இஸ்ரேல் - அமெரிக்க கூட்டணியுடன் சேர்ந்து சதி செய்பவர்களை முஸ்லிம்கள் அழிப்பார்கள்

## அரபு நாடுகளின் தலைவர்களுக்கு பின்லேடன் மிரட்டல்



(துபாய்)

அமெரிக்காவுடன் சேர்ந்து கொண்டு முஸ்லிம்களுக்கு எதிராக துரோகம் செய்யும் அரபுநாடுகளின் தலைவர்களை முஸ்லிம்கள் அழிப்பார்கள் என்று சர்வதேச பயங்கரவாதத் தலைவர் பின்லேடன் மிரட்டியுள்ளார்.

அல்கொய்தா இயக்கத்தின் தலைவரான பின்லேடன் பேசிய ஒலிநாடா ஒன்று அல்ஜசீரா தொலைக்காட்சி மூலம் ஒலிபரப்பானது.

இதில் அவர் கூறி இருப்பதாவது,

முஸ்லிம் மக்களுக்கு எதிரான இஸ்ரேல் அமெரிக்க கூட்டணியுடன் சில அரபு தலைவர்கள் சேர்ந்து கொண்டு சதி செய்து வருகின்றார்கள். இந்த தலைவர்களை தான் அமெரிக்கா மிதவாதிகள் என்று குறிப்பிடுகிறது. தவறு செய்பவர்களை முஸ்லிம்கள் அழிப்பார்கள் இதற்கான புனிதப்போரை நாம் தயார்ப்படுத்த வேண்டும்.

முதலில் ஈராக்கை வெற்றி கொள்ளவேண்டும்.


காசா மீதான இஸ்ரேல் தாக்குதல் இனப்படுகொலை ஆகும். (காசா பகுதி மீது இஸ்ரேல் 22 நாட்கள் தாக்குதல் நடத்தி ஆயிரத்து 300 பாலஸ்தீனியர்களை கொன்று குவித்தது) ஜெருசலேத்தை விடுவிக்க விரும்புபவர்கள் முதலில் ஈராக்கையும் பிறகு ஜோர்டானையும் வெற்றி கொள்ள வேண்டும். இந்த வெற்றிகள் வழியாக மேற்கு கரைக்கு திரும்ப வேண்டும்.

என்று அந்த ஒலிநாடாவில் பின்லேடன் குறிப்பிட்டு இருக்கிறார்.

கடந்த ஜனவரி மாதம் 14 ஆம் திகதி பின்லேடன் வெளியிட்ட ஒலிநாடாவில், உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம்கள் இஸ்ரேலை பழிவாங்க வேண்டும் என்று அழைப்பு விடுத்து இருந்தார்.

கடந்த 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் திகதி நடந்த அமெரிக்க தாக்குதலுக்கு பிறகு பின்லேடனும், அவரது தளபதி அல் ஜவாஹிரியும் 60 க்கு மேற்பட்ட ஒலிநாடாக்களை வெளியிட்டுள்ளனர். (ஓ-5,6 )

# 8 வயது மாணவனின் சாதனை : உயர்தர கணிதத்தில் 'ஏ' தரசித்தி



8 வயதில் உயர்தர கணித பரீட்சைக்குத் தோற்றி 'ஏ' தர சித்தி பெற்று பிரித்தானிய மாணவர் ஒருவர் புதிய சாதனை படைத்துள்ளார்.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றி 'ஏ' தர சித்தி பெற்ற மிகவும் இளம் மாணவர் என்ற பெருமையை, சுஹைறப் அஹமட் என்ற இந்த மாணவர் பெறுகிறார்.

இதன் மூலம், 2009 ஆம் ஆண்டில் 9 வயதில் உயர்தர கணித பரீட்சைக்குத் தோற்றி 'ஏ' தர சித்தி பெற்ற ஹொங்கொங் மாணவரான மார்ச் போடி ஹர்ட் ஜேஹவால் நிறைவேற்றப்பட்ட சாத னையை சுஹைறப் அஹமட் முறியடித்துள் ளார்.

மேலும் சுஹைறப் அஹமட்டின் சகோதரரான வாஜிஹ்(வயது11) மேற்படி உயர்தர கணிதப் பரீட்சையில் 96 சதவீத புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

நைட்வூட் ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்கும் சுஹைறப் தனது சாதனை குறித்து விபரிக்கையில் என்னை விட மிகவும் வயது கூடியவர்களுடன் சேர்ந்து பரீட்சை எழுதியது வித்தியாசமான அனுபவமாக இருந்தது. அப்பரீட்சைக்கு சிறந்த முறையில் தோற்றியதாக எனக்கு நம்பிக்கை இருந்த போதிலும் 'ஏ' தரசித்தி கிடைத்த போது உண்மையிலேயே ஆச்சரியமடைந்தேன் என்று கூறினார்.

கணித பாடங்களை வார நாட்களில் ஒரு மணித்தியாலம் முதல் 3 மணித்தியாலங்கள் வரையும் வார இறுதியில் 8 மணித்தியாலங்கள் முதல் 5 மணித்தியாலங்கள் வரையும் பயிற்சி செய்வதாக சுஹைறப் அஹமட் தெரிவித்தார். பெற்றோரின் வழிகாட்டலே தமது வெற் றிக்கு காரணமென சுஹைறப் அஹமட்டும் அவரது சகோதரரும் தெரிவித்தனர்.

பரீட்சைக்கான தயார் படுத்தலுடன் விளையாட்டுக்களில் ஈடுபடல், தொலைக் காட்சி நிகழ்ச்சிகளை கண்டுகளித்தல் கணனி விளையாட்டுக்களை விளையாடல் போன்ற பொழுது போக்குகளில் ஈடுபடவும் தமக்கு போதியளவு அனுமதி தமது பெற்றோரால் வழங்கப்பட்டதாக சிறுவர்கள் தெரிவித்தனர். (ஓ-5)

## யாழ்.மாவட்டத்திலுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு

# கல்வி அமைச்சின் அனுமதி கிடைத்ததும் ஆசிரியர் நியமனம்

## வடக்கு மாகாண கல்வி அமைச்சு தெரிவிப்பு

(திருகோணமலை)

யாழ்.மாவட்டத்தில் கல்வி வலய ரீதியாக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பிரகாரம் 447 தொண்டர் ஆசிரியர்களின் விபரங்கள் கல்வி அமைச்சிற்கு அனுப்பிவைத்துள்ளதாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மேற்படி அனுப்பிவைக்கப்பட்டுள்ள 447 தொண்டர் ஆசிரியர்களின் விபரங்களிற்கு கல்வி அமைச்சு அனுமதியளித்ததும் நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்படுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றும் 447 பேருக்கு கடந்த மாத நடுப்பகுதியில் கல்வி வலய ரீதியாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சால் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது. இந் நேர்முகப் பரீட்சையின் பிரகாரம் தொண்டர் ஆசிரியர்களின் விபரங்கள் கல்வி அமைச்சிற்கு அனுமதிக்கு அனுப்பி வைத் துள்ளதாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய கல்வி அமைச்சின் அனுமதி கிடைத்ததும் நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்படுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (5)

## யாழில் சீமெந்தின் விலை மாறுபட்ட விலைகளில்

### நுகர்வோர் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தனியார் வர்த்தக நிலையங்களில் சீமெந்தின் விலை நாளுக்கு நாள் மாறுபடுவதாக நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஒரு பைக்கற் சீமெந்து ஆயிரத்து 200முதல் ஆயிரத்து 300 ரூபா வரை வெவ்வேறு வர்த்தக நிலையங்களிலும் பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுகிறது என நுகர்வோர் தெரிவிக்கின்றனர். (5)

## நலன்புரி முகாம்களிலுள்ள அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகிறது

### யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சி நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள அரச ஊழியர்களுக்கு சம்பளங்கள் சீராக வழங்கப்பட்டு வருவதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதம்முதல் இவர்கள் வந்த ஒழுங்கின் பிரகாரம் உரிய திணைக்களங்கள் ஊடாக சம்பளங்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள அரச திணைக்கள ஊழியர்களை யாழ். மாவட்டத்திலுள்ள திணைக்களங்களில் இணைக்க யாழ். செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படுவதாக வெளியான செய்தி தொடர்பில் யாழ். அரச அதிபரிடம் கேட்ட போது அதனை அவர் மறுத்தார். (5)

## கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய கல்வி அபிவிருத்தி பயிற்சிப்பட்டறை

### யாழ்.கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய கல்வி அபிவிருத்தி தொடர்பான பயிற்சிப் பட்டறை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இப் பயிற்சிப் பட்டறையில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், அபிவிருத்திச் சங்க செயலாளர் மற்றும் அப் பகுதி முக்கியஸ்தர்கள் ஆகியோர் கலந்து கொண் டனர்.

இதில் பாடசாலை பௌதீக வளத்தேவை, கற்றல் கற்பித்தலுக்கு தேவையான வளங்கள், கல்வி மேம்பாட்டிற்கான முன்னேற்பாடுகள், பாடசாலை அபிவிருத்தியில் பெற்றோரின் பங்களிப்பு மற்றும் மாணவர் வரவை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் போன்ற விடயங்கள் தொடர்பில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பாடசாலை சமூகத்தினருடன் இணைந்து குழுச் செயற்பாடுகள் மூலம் இனங்காணப்பட்ட விடயங்கள் முன்வைக்கப்பட்டு கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. (5)

## தரம் 8 மாணவர்களுக்கான கணிதப் பாசறை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கல்விக் கோட்ட குடும்பப் பாடசாலைகளின் தரம் 8 மாணவர்களுக்கான கணிதப் பாசறை எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

இதில் யாழ்.கல்வி வலய கணிதப் பிரிவினர் மாணவர்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வர். (5)

# கப்பலில் எடுத்துவரப்பட்ட பொருட்கள் ப.நோ.கூ. சங்கங்களுக்கு விற்பனை

## மிகுதி தனியாருக்கு விற்பனை- அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் யாழ்.மாவட்டத்திற்கு கப்பல் மூலம் அனுப்பிவைக்கப்பட்டு நாவற்குழி, கோண்டாவில் அரச களஞ்சியங்களிலுள்ள பொருட்களை விருப்பம் தெரிவிக்கும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுமென யாழ். அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

இவ்வாறு பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்குவதற்கென யாழ். மாவட்ட செயலகத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ள பொருட்களின் அளவு, விலை விபரங்கள் வருமாறு,

| இல | பொருள் | விலை | அளவு (Mt) |
|---|---|---|---|
| 01 | சிவப்புநாட்டரிசி | 75.00 | 1123 |
| 02 | கோதுமைமா | 69.00 | 394 |
| 03 | சீனி | 78.00 | 1736 |
| 04 | பருப்பு( மஞ்சள்) | 138.00 | 266 |
| 05 | பருப்பு(சிவப்பு) | 164.00 | 172 |
| 06 | தேயிலை | 150.00 | 100 |
| 07 | லக்ஸ்பிறே (400g) தனி | 200.00 | 48871 |
| 08 | அங்கர்(400g) தனி | 278.00 | 620 |

மேற்படி பொருட்களை பெற்றுக்கொள்ள விரும்பும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கற் கட்டளைகளை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

குறித்த திகதிக்கு முன்னர் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களால் பெற்றுக்கொள்ளாத பொருட்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் யாழ்.தனியார் வர்த்தகர்களுக்கு வழங்கப்படுமெனவும் யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார். (5)

## நலன்புரி முகாம்களிலுள்ள முதியவர்கள் உறவினர் வீடுகளுக்கு செல்ல அனுமதி

### யாழ்.அரச அதிபர் நடவடிக்கை


(யாழ்ப்பாணம்)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சி நலன்புரி முகாங்களில் தங்கியுள்ள 60 வயதுக்கு மேற்பட்ட 89 பேரை உறவினர் வீடுகளிற்கு செல்வதற்கு அனுமதி வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

மோதல்கள் காரணமாக அரச கட்டுப்பாடற்ற பகுதிகளிலிருந்து கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்த மக்கள் தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவில் நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தங்கவைக்கப்பட்டுள்ள மக்களில் 60 வயதுக்கு மேற்பட்ட 89 பேரை யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அவர்களின் உறவினர் வீடுகளுக்கு செல்வதற்கு அனுமதி அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ. அரச அதிபர் தெரிவித்தார்.

எனினும் குடும்பம் ஒன்றில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களை மாத்திரம் உறவினர் வீடுகளுக்குச் செல்வதற்கு அனுமதி வழங்கப்படுமென தெரிவித்த யாழ்.அரச அதிபர் க.கணேஷ், அக் குடும்பத்திலுள்ள 60 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களை வெளியில் செல்ல அனுமதியளிக்கப்படமாட்டார்கள் எனவும் குறிப்பிட்டார். (5)



ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலையின் ஆண்டுவிழா மற்றும் பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் மங்கல விளக்கேற்றுவதையும், அருகில் அபிவிருத்தி உதவியாளர் திருமதி மகிந்தினி விஜயகுமார் மற்றும் விருந்தினர்களையும் படத்தில் காணலாம்.

# நீரிழிவு நோயும் அதனை கட்டுப்படுத்தும் உணவு வகைகளும்

மக்கள் தொகையின் அளவு அதிகரிக்க அதிகரிக்க நோய்களின் எண்ணிக்கையும் உயர்ந்துகொண்டே வருகிறது. இவ்வாறு மக்களை அவதியுறவைக்கும் நோய்களில் நீரிழிவு நோயும், இரத்த அழுத்த நோயும் தான் முதலிடம் வகிக்கிறது. இவை இரண்டும் ஒட்டிப் பிறந்த சகோதரர்களாக ஆட்டிப் படைக்கின்றன.

இன்று 63 சதவீதமாக உள்ள நீரிழிவு நோயாளியின் எண்ணிக்கை இன்னும் 10 ஆண்டுகளில் 20 சதவிகிதம் அதிகரிக்கும் என ஆராய்ச்சியாளர்கள் கணித்துள்ளனர்.

இதற்கு முக்கிய காரணம் நம் உணவு முறையே. மேலும் நகர வாழ்க்கையின் தாக்கமும் ஒரு காரணம். போதிய உடற் பயிற்சியின்மை என பல பாதிப்புகளின் வெளிப்பாடே நீரிழிவு நோய் வருவதற்கு காரணமாகிறது.

ஒரு குழந்தை இளம் வயதிலிருந்து வாலிப பருவத்திற்கு மாறுவதற்கு முக்கிய காரணமாக இருப்பது நாளமில்லா சுரப்பி மண்டலம்தான். இதை ஆங்கிலத்தில் எண்டோகிரைன் சிஸ்டம் என அழைப்பார்கள்.

இந்த நாளமில்லாச் சுரப்பிகள் தான் மனித உடல் மற்றும் மன வளர்ச்சிக்கு தேவையான ஹோர்மோன்களை உற்பத்தி செய்கின்றன. இந்த ஹோர்மோன்களின் சுரப்பானது வாத, பித்த, கபத்தை பொறுத்தே அமைகின்றன. இந்த மூன்றில் எதனுடைய நிலையில் மாறுபாடு ஏற்பட்டாலும் முதலில் பாதிக்கப்படுவது ஹோர்மோன்களே.

வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்களுக்கு முக்கிய பங்கு வகிப்பது ஹோர்மோன்கள் ஆகும். உடலுக்கு தேவையான சர்க்கரை அதாவது இன்சுலினை சுரக்கும் கணையம் பாதிக்கப்படுவதால் உடல் பருமன் ஏற்பட்டு நீரிழிவு நோய் உருவாக காரணமாகிறது.

இந்த நீரிழிவு நோயை முற்றிலும் குணப்படுத்த முடியாது. ஆனால் வராமல் தடுக்கவும், கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளவும் முடியும். இத்தகைய நோயின் தாக்கத்திலிருந்து விடுபட வைப்பது நம் உணவு முறையே.

முறையான உணவு, தேவையான உடற்பயிற்சியிருந்தால் நீரிழிவு நோயை நம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளலாம்.

கீழ்கண்ட உணவு முறைகளை தவறாமல் கடைப்பிடித்து வருவது நல்லது.

**நீரிழிவு நோயைக் குணப்படுத்தும் காய்கறிகள்.**

கத்தரி பிஞ்சு, சுரைக்காய், முட்டைக்கோஸ், முள்ளங்கி, வெண்டைக்காய், கோவைக்காய், பீன்ஸ், சாம்பல் பூசணி, புடலங்காய், வாழைத்தண்டு, காலிபிளவர், வெண்பூசணி, பாகற்காய், வாழைப்பூ, காராமணி, கொத்தவரங்காய், வெங்காயம், பீர்க்கங்காய், வாழைப் பிஞ்சு, முருங்கைக்காய், வெள்ளிக்காய், சௌசௌ இவைகளுடன் கறிவேப்பிலை, இஞ்சி, கொத்தமல்லி, புதினா சேர்த்து பச்சடியாக தினமும் உணவில் சேர்த்து வந்தால் நீரிழிவு நோயின் பாதிப்பிலிருந்து எளிதில் மீளலாம்.

**நோயைக் கட்டுப்படுத்தும் கீரைகள்**

சர்க்கரை நோயைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் தன்மை கீரைகளுக்கும் உண்டு.

கறிவேப்பிலை, தூதுவளைக் கீரை, ஆரைக்கீரை, முசுமுசுக்கைக் கீரை, வெந்தயக் கீரை, துத்திக் கீரை, முருங்கைக் கீரை, மணத்தக்காளிக் கீரை, அகத்திக்கீரை, சிறு கீரை, அரைக்கீரை, வல்லாரைக் கீரை, கொத்த மல்லிக் கீரை.

இவற்றில் ஏதாவது ஒன்றை சூப் செய்து தினமும் 1 டம்ளர் வீதம் காலை அல்லது மாலை ஒருவேளை சாப்பிட்டு வரலாம்.

அல்லது இவற்றில் ஏதாவது ஒன்றை ஏதாவது ஒரு வகையில் உணவில் சேர்த்து வந்தால் நீரிழிவு நோய் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்.

**நீரிழிவு நோய்க்காரர்களுக்கு உகந்த பழங்கள்.**

சாத்துக்குடி -1, ஆரஞ்சு -2, ஆப்பிள் (தோலுடன்) - 1, கொய்யா (சிறியது) - 2, பேரிக்காய் (சிறியது) - 2, வெள்ளரிக்காய் - 2, அன்னாசிப்பழம் - 4 வளையங்கள், தர்ப்பூசணி (1 துண்டு). மேல் சொன்ன பழங்களில் ஏதாவது ஒன்றை குறிப்பிட்டுள்ள அளவுகளில் தினமும் உண்ணலாம்.

உணவுக்கு இடைப்பட்ட நேரங்களில் பசி அல்லது தாகம் எடுத்தால் வெள்ளரி, அரிசிப்பொரி, மோர் (கறிவேப்பிலை, கொத்தமல்லி சீரகம் கலந்தது) கோதுமை உப்புமா, அவித்த சுண்டல், சிறுபயறு, கொண்டைக் கடலை, கொள்ளு, தட்டைப்பயிறு இவற்றில் ஏதாவது ஒன்றை சாப்பிடலாம்.

எலுமிச்சை சாறு - 200 மி.லி, வாழைத் தண்டு சூப் - 200 மி.லி, அறுகம்புல் சூப் - 200 மி.லி, நெல்லிக்காய் சாறு - 100 மி.லி, கொத்தமல்லி சூப் - 100 மி.லி, கறிவேப்பிலை சூப் - 100 மி.லி.

இவற்றில் ஏதாவது ஒன்றை சர்க்கரை சேர்க்காமல் சாப்பிடுவது நல்லது. எண்ணெயில் வறுக்கப்பட்ட அனைத்து அசைவ உணவு களையும் தவிர்க்க வேண்டும்.

முட்டை 1 - வெள்ளைக்கரு மட்டும், மீன் - 2 துண்டுகள், கோழிக்கறி - 100 கிராம் (அவித்தது)

Dr. S. சுகன்யா B.S.M.S

மேற்கண்ட உணவுகளை முறையாக சாப்பிட்டு தினமும் உடற்பயிற்சியும், நடைப் பயிற்சியும், ஆசனமும் செய்து வந்தால் சர்க்கரை நோய் நம் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்.

மருத்துவ விளக்கம்

# கராம்பின் மருத்துவப் பயன்கள்

அன்றாட உணவில் நாம் சேர்க்கும் பொருட்கள் அனைத்தும் மருத்துவக் குணங்களைக் கொண்டவை. நோய் வரும்முன் காத்து நீண்ட ஆயுளுடன் வாழ இவையும் பக்க பலமாக உதவி வருகின்றன.

ஒவ்வொரு வீட்டின் சமையல் கூடங்களிலும் சீரகம், சோம்பு, கடுகு, வெந்தயம், கருவாப்பட்டை, கராம்பு, ஏலம் என ஒரு மருத்துவக் களஞ்சியமே அடங்கியிருக்கும். இவற்றை அன்றாட உணவில் சேர்த்து சாப்பிடும் நாம் அதன் மருத்துவ பயன்களைப் பற்றி ஏனோ தெரிந்து கொள்ளவில்லை. ஆனால் நம்முன்னோர்கள் இவற்றைப் பற்றி நன்றாக தெரிந்திருந்தால் தான் அவற்றை தினமும் உபயோகப்படுத்தவே இவற்றை சமையலறையில் உள்ள அஞ்சறைப் பெட்டியில் வைத்தார்கள்.



இன்று இலவங்கம் என்று அழைக்கப்படும் கராம்பு பற்றி தெரிந்து கொள்வோம்.

கராம்பு இந்தோனேசியாவில் 80 சத விகிதம் உற்பத்தி செய்யப்பட்டு உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்தியாவில் கேரளம், தமிழ்நாடு, வடகிழக்கு மாநிலங்களில் அதிகம் விளைகிறது.

நாம் அன்றாடம் பயன்படுத்தும் பற்பசைகளில் கராம்பு சேர்க்கப்படுகிறது. இதிலிருக்கும் சுறுசுறு தன்மையானது வாய்க்கு புத்துணர்வைக் கொடுக்கிறது.

சமையலில் கராம்பு அதிக அளவில் சேர்க்கப்படுகிறது. பிரியாணி உணவில் அதிகம் சேர்க்கிறார்கள். சீன வகை உணவிலும் அதிகம் சேர்க்கப்படுகிறது.

இதற்கு அஞ்சுகம், உற்கடம், கருவாய்க் கிராம்பு, சோசம், திரளி, வராங்கம் என்ற பல பெயர்களும் உண்டு.

**பசியைத் தூண்ட**

சிலருக்கு குறைந்த அளவே உணவை சாப்பிட்டாலும் செரிமானமாகாமல் இருப்பது போல் தோன்றும். இவர்களுக்கு பசியே இருக்காது. இவர்கள் தினமும் உணவில் கராம்பு சேர்த்துவந்தால் செரிமான சக்தி அதிகரித்து நன்கு பசியெடுக்கும்.

**பித்தம் குறைய**

வாதம், பித்தம், கபம் என்ற முக்குற்றத்தால் தான் மனித உடலின் செயற்பாடுகள் அனைத்தும் அமைந்துள்ளன. இதில் எதன் நிலை மாறினாலும் உடலில் பாதிப்புகள் ஏற்படும். இவற்றில் அதிகம் நிலைமாறுவது பித்த நீர்தான். பித்த அதிகரிப்பு ஏற்பட்டு உடலில் பல நோய்கள் உண்டாகும். இந்நிலை மாற கராம்பு சிறந்த மருந்தாகும்.

பித்தம் அதிகம் உள்ளவர்கள் தினமும் ஒன்று அல்லது இரண்டு கராம்பை வாயில் போட்டு மெதுவாக மென்று சாறு இறக்கினால் பித்தம் குறையும்.

**பல்வலி நீங்க**

பல்வலியால் அவதிப்படுபவர்கள் வலி நிவாரண மாத்திரைகளை உபயோகப்படுத்துவார்கள். இது தொடர்ந்தால் பல பக்க விளைவுகள் உண்டாகும். சொத்தைப் பல் மற்றும் பல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு கராம்பே உடனடி நிவாரணி.

கராம்பை நசுக்கி பல் வலியுள்ள இடத்தில் வைத்தால் பல்வலி உடனே குணமாகும். ஆனால் இது நிரந்தர தீர்வல்ல. உடனே மருந்துவரை அணுகி தகுந்த மருத்துவம் செய்து கொள்வது நல்லது.

**வாந்தி நிற்க.**

பேரூந்துகளில் பயணம் செய்பவர்களுக்கு சில சமயங்களில் வாந்தி ஏற்படும். மலை ஏறுபவர்கள் சிலருக்கு வாந்தி உண்டாகும். இவர்கள் கராம்பை வாயில் போட்டு இலேசாக மென்று சாறை உள்ளே இறக்கினால் வாந்தி நிற்கும்.

**வாய்ப் புண், வயிற்றுப் புண் குணமாக**

வயிற்றில் புண் இருந்தால் வாயிலும் புண்கள் உண்டாகும். இவர்கள் கராம்பை அரைத்து அதனுடன் தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் வாய்ப்புண், வயிற்றுப் புண் குணமாகும்.

**வறட்டு இருமல் நீங்க**

வறட்டு இருமல் உள்ளவர்கள் கராம்பு பொடியுடன் பனங்கற்கண்டு சேர்த்து பாலில் கலந்து காய்ச்சி அருந்தி வந்தால் வறட்டு இருமல் நீங்கும். சீன மருத்துவத்தில் கராம்பின் பங்கு அதிகம். சிறுநீரகம், மண்ணீரல், வயிறு சம்பந்தப்பட்ட நோய்களுக்கு கரம்பையே அதிகம் பயன் படுத்துகின்றனர்.

**தலைப் பாரம் நீங்க**

கராம்பை நீர்விட்டு அரைத்து நெற்றியிலும் மூக்குத் தண்டின் மீதும் பற்று போட்டு வந்தால் தலை யில் கட்டிய நீர் இறங்கி தலைப் பாரம் குறையும்.

**தொண்டைப்புண் ஆற**

கராம்பை தணலில் வதக்கி வாயிலிட்டு சுவைத்து சாறு இறக்கினால் தொண்டைப்புண் ஆறும். பற்களின் ஈறு கெட்டிப்படும்.

கராம்பு நிலவேம்பு இவற்றை சம அளவாக எடுத்து நீரில் கொதிக்க வைத்து வடிகட்டி குடிநீராக அருந்தி வந்தால் உடல் அசதி நீங்கும். சுரத்திற்குப் பின் உண்டாகும் களைப்பைப் போக்கும்.

கராம்பு, சுக்கு வகை 5 கிராம் எடுத்து அதனுடன் ஓமம், இந்துப்புவகை 6 கிராம் எடுத்து சூரணம் செய்து தேனுடன் கலந்து கொடுத்தால் உணவு நன்றாக செரிமானமாகும்.

**தோலில் உண்டாகும் படைகளுக்கு**

கராம்பை நீர் விட்டு அரைத்து படைகள் உள்ள இடத்தில் பற்றுப் போட்டால் தோலில் உண்டான படைகள் மறைந்து போகும்.

**கராம்புத் தைலம்.**

கராம்பிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயே கராம்பு தைலம் என்று அழைக்கப்படுகிறது. இது நல்ல மணமுள்ளதாக இருக்கும். நாவில் பட்டால் உடனே சிவக்கும். இந்த கராம்பு தைலத்தை பஞ்சில் நனைத்து பல்வலி உள்ள இடத்தில் வைத்தால் பல்வலி குறையும்.

# தகவல் துளிகள்

- தினமும் மூன்று கோப்பை தேநீர் பருகி வருவதன் மூலம் வாத நோயிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளலாம் என்கின்றனர் நியூயோர்க் டேவிட் கெப்பன் மருத்துவக் கல்லூரியின் பேராசிரியர் லினோ அராப் தலைமையிலான ஆய்வுக் குழுவினர்.
- குழந்தைகளுக்கான மலேரியா நோயினைக் கட்டுப்படுத்த சுவீஸ் நாட்டு மருந்து தயாரிக்கும்நிறுவனம், செரி பழச்சுவையுடன் கூடிய மருந்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்குக் குழந்தைகளிடத்தில் நல்ல வரவேற்பு இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.
- வைன் என்ற மது வகை அருந்தினால் புற்று நோய் வராது என்றஎண்ணம் தவறானது. வைனை அருந்தினாலும் புற்றுநோய் வரும் என்று நிரூபித்துள்ளனர் லண்டனைச் சார்ந்த விஞ்ஞானிகள்.
- பறவைகளும், விலங்கினங்களும் உறங்குவதற்கு அதன்உடலில்உள்ள ஆயிரத்து 700 ஜீன்கள் உதவி புரிவதாக வடக்கு கரோலினா மாநில பல்கலைக் கழக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.
- உடலில் உள்ளஇனிப்பு சுவையைக் கொண்டு புதிய வடிவிலான தடய பரிசோதனை முறையை டெல் அவிவ் பல்கலைக் கழகத்தின் வேதியல் துறை விஞ்ஞானி மைக்கேல் கோசின் அறிமுகப்படுத்தியுள்ளார்.
- உடற்பருமனைக் குறைப்பதற்காக ஸ்வீட் காஸ்ட்ரக்ட் டோமீ என்ற அறுவைச் சிகிச்சை இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் வயிற்றுப் பகுதியில் மேற்கொள்ளப்படும் அறுவை சிகிச்சையில் வயிற்றுப் பகுதியின் கொள்ளளவு குறைக்கப்படுகிறது.
- இதமான இசைமூலம் அல்சைமர் என்கிற மறதி நோய்க்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

நீ கவலைகளைச் சுமந்து கண்ணீர் சிந்துவதை விட, இலட்சியங்களைச் சுமந்து இரத்தம் சிந்து. உலகம் உன்னைப் போற்றும்.

~ லெனின்

வலம்புரி

## இலங்கையில் கேட்ட தமிழ்த் தனிநாடு தமிழகத்தில் சாத்தியமாகும் வாய்ப்பு

வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்து பொது மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கு அமெரிக்கா எடுத்த முயற்சியை இந்தியா தடுத்து நிறுத்திய விடயம் தற்போது வெளிவரத் தொடங்கியுள்ளது.

ஈழத்தமிழரைக் காப்பாற்றுமாறு தமிழக மக்கள் குரல் கொடுக்கும் இவ்வேளையில், இந்திய மத்திய அரசு இலங்கை விவகாரத்தில் கபடத்தனத்துடன் செயற்படுவது இந்தியாவின் இறையாண்மைக்கு ஆபத்தானதென்பதை அந்த நாடு புரிந்து கொள்ள வேண்டும்.

ஆறுகோடி தமிழ் மக்களைக் கொண்ட தமிழகம் தனிநாடு கேட்குமாக இருந்தால் இந்தியாவின் இறையாண்மைக்கு அது எத்துணை பாதகமாக அமையும் என்ற சிந்தனை, இந்திய மத்திய அரசிடம் இல்லாமல் போய்விட்டது.

தமிழகம் தனிநாடு கேட்குமாக இருந்தால், அதற்கு இந்திய மத்திய அரசு மற்றும் இலங்கை அரசைத் தவிர உலகின் ஏனைய நாடுகள் அனைத்தும் அதற்கு ஆதரவு வழங்கும்.

குறிப்பாக அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான், பிரிட்டன் போன்ற நாடுகள் தமிழகம் தனி நாடாவதற்கு தம்மாலான உதவியை ஆற்றும்.

எனவே, இலங்கைத் தமிழர் விடயத்தில் எதிரான போக்குடைய இந்திய மத்திய அரசு தனது போக்கு தனது இறையாண்மைக்கு ஆபத்தானதென்பதைப் புரிந்து கொள்ளாமல் செயற்பட்டு வருகிறது.

இந்த அறியாமை இலங்கை அரசிடமும் இருக்கவே செய்கிறது.

அதாவது, தற்போது இருக்கக்கூடிய கள நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே உகந்த வழியாகும்.

ஆனால் யுத்தத்தில் கிடைத்த வெற்றியை அடிப்படையாகக் கொண்டு சமாதானப் பேச்சுக்கே இடமில்லை என அரசு கூறுகிறது.

இலங்கை அரசின் இந்த இறுக்கமான முடிவு, தமிழர்களுக்கு ஒருநாடு தேவை என்ற நினைப்பை இந்தியாவின் தமிழகத்தில் ஏற்படுத்தி விடலாம்.

ஆக, இந்திய மத்திய அரசினதும் இலங்கையினதும் தூர நோக்கற்ற நடவடிக்கைகள் உலக வரைபடத்தில் தமிழகம் என்ற தனிநாட்டை உருவாக்கலாம்.

அத்தகையதோர் நிலைமை ஏற்பட்டுவிட்டால் அதன் விளைவு இன்னுமோர் தமிழ் நாட்டை உருவாக்கும் அல்லவா!

# பொருளாதார நெருக்கடியால் இலங்கையில் இவ்வருடம் 50 ஆயிரம் பேர் வேலையிடிப்பர்

## தொழிலாளர்கள் சங்க தலைவர் எதிர்வு கூறல்

(கொழும்பு)

உலகளாவிய ரீதியில் ஏற்பட்டிருக்கும் நிதி நெருக்கடி இலங்கையிலும் கூடுதலான தாக்கத்தை ஏற்படுத்த ஆரம்பித்துள்ளது.

இலங்கையில் இதுவரை 16 நிறுவனங்கள் முழுமையாகத் தமது பணியாளர்களை வேலையிலிருந்து நிறுத்தியிருப்பதாக நிறுவனங்களுக்கு இடையிலான தொழிலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனைவிட மேலும் 29 நிறுவனங்கள் பகுதியளவில் தொழிலாளர்களை பணியிலிருந்து இடைநிறுத்தியுள்ளன. ஆடை உற்பத்தி நிறுவனங்கள், அலுமினியம் மற்றும் தரை ஓடுகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களே பெரும்பாலும் தமது பணியாளர்களை பணியிலிருந்து இடைநிறுத்தியுள்ளதுடன், குறிப்பாக அநுராதபுரம் போன்ற கிராமப் புறங்களிலுள்ள நிறுவனங்களே பொருளாதார நெருக்கடியால் மூடப்பட்டுள்ளன.

ஆடை, சீமெந்து, ஒட்டுப் பலகைகள் மற்றும் பைகள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் பல தமது பணியாளர்களின் எண்ணிக்கையைக் குறைத்திருப்பதுடன், சித்திரை வருடப் பிறப்பிற்குப் பின்னர் மேலும் பலர் பணியிலிருந்து நீக்கப்படுவார்கள் என சில நிறுவனங்கள் எச்சரித்துள்ளன.

பல நிறுவனங்களின் வர்த்தகச் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டிருப்பதால் பெரும்பாலன நிறுவனங்கள் தமது பணிகளை 80 வீதத்தால் குறைத்துவிட்டன என்று நிறுவனங்களுக்கு இடையிலான தொழிலாளர்கள் சங்கத்தின் தலைவர் வசந்த சமரசிங்க கூறியுள்ளார்.

உலகளாவிய ரீதியில் 50 மில்லியன் பேர் பொருளாதார நெருக்கடியால் வேலைகளை இழந்திருப்பதாக சர்வதேச தொழிலாளர் சம்மேளனம் தெரிவித்துள்ளது. இலங்கையில் இந்த வருடத்தில் 50 ஆயிரம் பேர் வேலையிழப்பார்கள். எனினும் வேலையிழக்கும் தொழிலாளர்கள் வீதிகளுக்குத் தள்ளப்படுவதை தடுப்பதற்கு அரசாங்கத்திடம் எந்தத் திட்டமும் இல்லை என்றார் அவர்.

நட்டஈடு வழங்குவதற்கான சூத்திரங்கள் காணப்படுகின்ற போதும், வேலைகளை இழக்கும் பணியாளர்களுக்கு நட்டஈடு வழங்கப்படுவதில்லையென அவர் கவலை வெளியிட்டார். இந்த நிலைமை தொடர்ந்தால் அரசாங்கத்துக்கும் வரிமூலம் கிடைக்கும் வருமானம் இழக்கப்பட்டுவிடும் என அவர் குறிப்பிட்டார். இதனை விட, கொழும்பிலுள்ள பல்வேறு முன்னணி நிறு வனங்கள் பொருளாதார நெருக்கடியைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஆரம்ப கட்டமாகத் தமது செலவுகளைச் சுருக்குவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன. இதனை முன்னிட்டு சில நிறுவனங்களில் குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் குளிரூட்டிகள் நிறுத்திவைக்கப்படுவதுடன், சில நிறுவனங்களில் சனிக்கிழமைகளில் குளிரூட்டிகள் இயக்கப்படுவதில்லை. நிதி நெருக்கடிகளை எதிர் நோக்கியிருக்கும் நிறுவனங்கள் பல இதுபோன்று பல்வேறு வழிகளில் செலவுச் சுருக்கங்களை மேற்கொண்டிருப்பதுடன், வேலை நாட்களை நான்காகக் குறைப்பது பற்றிச் சில நிறுவனங்கள் ஆலோசித்து வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

### பொருளாதார நெருக்கடியை உணர்ந்திருக்கும் அரசாங்கம்

இலங்கையில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியை அரசாங்கம் உணர்ந்திருப்பதாகத் தெரிவித்திருக்கும் நுகர்வோர் விவகாரத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன, நெருக்கடியைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகக் கூறியுள்ளார்.

அமெரிக்காவில் 2.6 மில்லியன் பேர் வேலையிழந்துள்ளனர். இதேபோன்றே சிங்கப்பூர், பிரித்தானியா, டுபாய் போன்ற நாடுகளிலும் வேலையிழப்புக்கள் அதிகரித்துள்ளன. அந்தளவு நாம் இன்னமும் பாதிக்கப்படவில்லை என்றார். - (ஓ-6)

# இலங்கைப் பிரச்சினைக்கு இந்தியாவால் மட்டுமே தீர்வு

## தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் முத்துசிவலிங்கம் தெரிவிப்பு

இந்தியாவால் மட்டுமே இலங்கை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண முடியும் என்று தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் முத்து சிவலிங்கம் கூறியுள்ளார். கும்பகோணத்தில் நடந்த ஒரு திருமண நிகழ்ச்சியில் பங்கேற்பதற்கு சென்றிருந்த அமைச்சர் அதற்கு முன்பு செய்தியாளர்களிடம் பேசிய போது,

இலங்கை பிரச்சினைக்கு தீர்வு காண இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் ஆர்வம் காட்டி வருகின்றன. ஆனாலும், இந்தியாவால் மட்டுமே இலங்கை பிரச்சினையில் நிலையான தீர்வு காண நடவடிக்கை எடுக்க முடியும். இலங்கையில் விரைவில் அமைதி ஏற்பட்டால் அனைவருக்கும் நல்லது என்றார். (ஓ-5)

# சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் அடுத்த வாரமளவில் இலங்கைக்கு விஜயம்

## கடன் நிபந்தனைகள் குறித்து கலந்துரையாடுவர் என தகவல்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி நிதிகள் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன் கிழமை இலங்கைக்கு வருகை தரவிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை அரசாங்கத்தினால் கோரியுள்ள கடனை வழங்குவதற்காக விதிக்கப்படவுள்ள நிபந்தனைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கே அவர்கள் இலங்கைக்கு வருகைதரவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

நிதி தொடர்பில் அரசாங்கம் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூற வேண்டிய நிலையில், சர்வதேச நாணய நிதியத்திடம் சுமார் 1.9 பில்லியன் டொலர்களை (19 ஆயிரம் கோடி ரூபாவை) கடனாக பெற்றுக்கொள்ளவிருப்பதாக பிரதான எதிர்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சுமத்தி வருகின்றது.

இதேவேளை சர்வதேச நாணய நிதியத் திடம் கோரியுள்ள கடனை அரசாங்கம் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் மனித உரிமை கள் மற்றும் ஊடக சுதந்திரத்தை நாட்டில் பாதுகாத்தல், ரூபாவின் பெறுமதியை பேணுதல், சகல நிவாரணங்களையும் விலக்கி கொள்ளுதல் மற்றும் ஊழல் மோசடிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற நிபந்தனைகளே விதிக்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து அரசாங்கம் 2001 ஆம் ஆண்டு கடன் பெற்றுக் கொண்ட போது விதிக்கப்பட்ட வட்டிவீதத்தை விடவும் கூடுதலான வட்டி வீதத்திலேயே அரசாங்கம் கடன் பெற்றுக் கொள்ளவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-5,6)

# இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்கு ரூபா 2.12 கோடி

## அதிமுக சார்பில் ஜெயலலிதா வழங்கினார்



(சென்னை)

இலங்கை தமிழர்களுக்காக அ.தி.மு.க சார்பில் திரட்டப்பட்ட ரூபா 2.12 கோடிக்கான காசோலையை செஞ்சிலுவைச் சங்கத்திடம் அ.தி.மு.க பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா வழங்கினார்.

இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை கண்டித்தும், இலங்கையில் போரை நிறுத்த வலியுறுத்தியும் அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா கடந்த சில தினங்களுக்கு முன்உண்ணாவிரதம் இருந்தார்.

அப்போது உண்ணா விரத மேடையில் இலங்கைத் தமிழர்களுக்கு நிவாரண நிதி திரட்டுவதற்காக உண்டியல் வைக்கப்பட்டிருந்தது.

அதில் ஜெயலலிதா தனது சொந்த நிதியில் இருந்து ரூபா 5 இலட்சமும், அ.தி.மு.க சார்பில் ஒரு கோடியும் வழங்கினார். அதேபோல் அன்று தமிழகம் முழுவதும் நடந்த அ.தி.மு.க உண்ணா விரதத்தில் உண்டியல் வைக்கப்பட்டிருந்தது.

இலங்கைத் தமிழர்களுக்காக திரட்டப்பட்ட ரூபா2.12 கோடிக்கான காசோலையை செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஜெயலலிதா வழங்கினார். (ஓ-6)

# சுவாமி விவேகானந்தரின் வீர முரசு

## பலம்




எனது துணிவுடைய இளைஞர்களே, நீங்கள் அனைவரும் பெரும் பணிகளைச் செய்யப் பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள். குட்டி நாய்களின் குரைப்பைக் கண்டு நடுங்காதீர் கள்; வானத்தில் முழங்கும் இடிக்கும் அஞ்சவேண்டாம்; நிமிர்ந்து நின்று வேலை செய்யுங்கள்.

உங்கள் நாடு வீரர்கள் வேண்டி நிற்கின்றது. வீரர்களாகுக ஒரு பாறையைப் போல் உறுதியாக நிற்பீர்களாக. உண்மையே எப்பொழுதும் வெல்கின்றது. இந்தியா வேண்டுவது, நாட்டினரின் இரத்தக் குழாய்களிலே ஒரு புது வலிமையை ஊட்டும் புதியதொரு மின்சாரத்தீயையே, துணியுங்கள், துணியுங்கள்; மனிதன் சாவது. ஒரு முறையே. எனது சீடர்கள் கோழைகளாக இருக்கக் கூடாது. கோழைத்தனத்தை நான் வெறுக்கிறேன். மிக ஆழ்ந்த மன அமைதியைக் குலையாது போற்றுங்கள். அற்பர்கள் உங்களை எதிர்ப்பதை எள்ளளவும் பொருட்படுத்தாதீர்கள். கண்களும் காதுகளும் இரண்டே என்பதையும், ஆனால் வாய் ஒன்றே என்பதையும், கருத்தில் வையுங்கள். பெரும் பணிகள்யாவும் பலத்த இடையூறுகள் வாயிலாகவே கைகூடுகின்றன. ஆண்மையோடு முயலுங்கள். பெண்ணாசை பொன்னாசை இவற்றிற்கு வசப்பட்ட அற்பர்களைப் பொருட்படுத்த வேண்டாம்.

# சர்வகட்சி பிரதிநிதிகள் குழு தீர்வை வெளியிட்டதும்

# ஐக்கிய தேசிய கட்சி யோசனையை முன் வைக்கும்



## ரவிகருணாநாயக்க எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வகட்சி பிரதி நிதிகள் குழுவினர் அரசியல் தீர்வின் மாதிரியை வெளியிட்டால் இனப் பிரச்சினை தீர்வு தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சி தனது யோசனையை முன் வைக்கும் என்று கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

சர்வகட்சி பிரதிநிதிகள்குழுவில் பங்கு கொள்வதில் அர்த்தமில்லை என்று உணர்ந்ததன் பின்னரே அதில் கலந்து கொள்வதில்லை என தீர்மானித்ததாகவும் அவர் மேலும் கூறினார்.

இனப்பிரச்சினை தீர்வுத் திட்டம் தொடர்பாக ஆராய்வதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவில் ஐக்கிய தேசிய கட்சி ஏன் கலந்துகொள்ளாமல் இருக்கின்றது? என வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது.

ஜனாதிபதியினால் சர்வகட்சி பிரதி நிதிகள் குழு நியமிக்கப்பட்டதும் ஐக்கிய'தேசியக் க்ட்சி அதில் கலந்து கொண்டது.

அத்துடன் எமது கருத்துக்களை தெரிவித்து வந்ததுடன் குழுவின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வந்தோம். பின்னர் பிரதிநிதிகள் குழுவில் கலந்து கொள்வதில் அர்த்தம் இல்லை என்பதை நாம் உணர்ந்து கொண்டோம். அதன் பின் னர் அதில் கலந்து கொள்வதில்லை என தீர் மானித்தோம்.

காரணம் சர்வகட்சி பிரதி நிதிகள் குழுவில் எந்த விதமான ஆக்க பூர்வமான விடயங்களும் இடம்பெறவில்லை. எனவே ஐக்கிய தேசியக் கட்சிஅதன் கூட்டங்களில் கலந்து கொள்வதில் அர்த்த மில்லை.

எனினும் சர்வகட்சி பிரதிநிதிகள் குழு இனப் பிரச்சினை தீர்வு தொடர்பான தீர்வு யோசனை ஒன்றை முன்வைத்ததும் ஐக்கிய தேசியக் கட்சி தனது யோசனையை முன் வைக்கும்.

தமிழ் மக்களுக்கு தீர்வாக அரசாங்கம் எதனை கொடுக்கப் போகின்றது? என்பது தொடர்பில் நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அதன்பின்னர் எமது யோசனைகளை முன்வைப்போம்.

இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் ஆரம்பத்திலிருந்து ஐக்கிய தேசியக் கட்சி தெளிவான நிலைப்பாட்டில் இருந்து வருகின்றது.

அரசாங்கத்தின் தீர்வு முறைமை எவ்வாறு அமையும் என்பதனையே பார்த்துக் கொண்டிருக்கின்றோம். (ஓ-5)

## இடம்பெயர்ந்த மக்கள் இம்மாத இறுதிக்குள் குடியமர்த்தப்படுவர்

(கொழும்பு)

இம் மாத இறுதிக்குள் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் அடிப்படை வசதிகளுடன் குடியமர்த்தப்படுவர் என மீள் குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரணத்துறை அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவிற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டதன் பின்னர் வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.


## விற்பனை நிலையம் திறப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் தற்காலிக விற்பனை நிலையம் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலய சூழலில் அமைக்கப்பட்டுள்ளது.

பக்தர்களது நலன் கருதி பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த விற்பனை நிலையத்தில் பொங்கலுக்குத் தேவையான அரிசி, தேங்காய், சர்க்கரை ,வறுத்த பயறுடன் அர்ச்சனைப்பொருட்களும் பெற்றுக் கொள்ளலாம் என்று சங்கத்தின் பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார். (ஓ-29)








யாழ்ப்பாணம் ஊடகவளங்கள் நிலையத்தில் நடைபெற்ற எழுத்தாணி -2 (ஊடக இதழ்) வெளியீட்டு விழாவில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் ஊடக வளங்கள் நிலைய இணைப்பாளருமான பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை உரையாற்றுவதையும், ஊடக இணைப்பாளர் விமல் சுவாமி நாதன் மதிப்பீட்டுரை நிகழ்த்துவதையும், எழுத்தாணி -2 இன் ஆசிரியர் கூ.சதீபன் பத்திரிகைய்யை வெளியீட்டு வைக்க பேராசிரியர் சிவநாதன் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம். (படங்கள் அலுவலகச் செய்தியாளர்)

# தெட்சண கைலாயம் அருள் மிகு திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய பிரதம குருக்கள்

# சிவ ஸ்ரீ சிவகுகராஜ குருக்கள் அவர்களின்

# 180 ஆம் நாள் நினைவஞ்சலி



| பிறப்பு | அழிப்பு |
|---|---|
| 03 | 21 |
| 05 | 09 |
| 1969 | 2008 |

## சிவப்பணியாற்றிய சிவகுகராஜனே

ஆண்டவனே உனக்கும் கண்கள் இல்லையா? கருணையும் இல்லையா? படைத்தல் , காத்தல், அழித்தல், அருளல் என்று எத்தனையோ அவதாரங்களை எடுத்து தர்மங்களை நிலை நாட்டினாய். ஆனால்,உன்னையே நினைத்து சிவதொண்டே முழுத்தொண்டு என்று சிவப்பணியாற்றி வந்த சிவகுகராஜனை நடுரோட்டில் வைத்து துடிதுடிக்க கொடியவர்கள் கொன்றனர்.

சைவசமய குரு படுகொலை செய்யப் பட்டதைப் பார்த்தும் ஆண்டவனே இரக்கம் காட்ட மனம் இல்லையா? அநியாயம், அட்டூழியம், கொள்ளை, கொலை, கற்பழிப்பு. இவை அனைத்தையும் தொடர்ந்து செய்யும் அசுரக்குணம் கொண்ட அரக்கர்களை அழிப்பதற்கு அவனியிலே யார் உளர்? உன்னையே உலகம் என்று வாழும் அந்தணர்கள் மற்றும் அடியவர்களின் உயிர்களைக் காப்பாற்று.

பூமியிலே கொடுமைகள் செய்வோரை அழித்து சிவதர்மமே உலகில் உயர்ந்தது என்று இந்த பாழாய்ப்போன உலகத்திற்கு எடுத்துக் காட்ட உனது திருக்கண் பார்வையை ஒரு முறை எம் மண் மீது பார் ஐயா.

மரணத்தை விட மன்னிப்பதே உயர்ந்தது என்று கூறும் சிவதர்மம் என்றும் வெல்லும்.

திருமலைத் தீபமேசிவகுகராஜனே
சிவ தர்மங்கள் பல புரிந்தாய்
சிவப்பணி யாற்றி வந்த உன்னை
கோழைத்தனமாக கொன்றனரே.
நீ செய்த பணிகள் யாவும் இறைபணி தானே
ஏன் உன்னை அழித்தார்கள்
கலியுகத்தில் காலன் காவுகொண்டது சரிதானா?
படைத்தல் காத்தல் அழித்தல் அருளல் என
பல தொழில்களை புரியும் இறைவா
உனக்கும் கண்கள் இல்லையா
மாநிலத்தில் மனிதர்கள் படும் பாடு
உனக்குப் புரியவில்லையா
புண்ணிய பூமியில் புனிதம் கெட்டுவிட்டது
தர்மம் செத்து விட்டது நியாயம் அழிந்து விட்டது.
இறைவா உன்னையே நம்பி வாழும்
மக்களை காப்பாற்ற வருவாயா பூமிக்கு.

குடும்பத்தினர்.

(க/2200)

## ஒரே ஒரு 'இருபது -20' போட்டி

# மேற்கிந்தியத் தீவுகள் அணி 6 விக்கெட்டுகளால் வெற்றி

சர்வானின் அதிரடியான ஆட்டத்தின்மூலம்மேற்கிந்தியத்தீவுகள்அணி ஒரே ஒரு இருபது-20 போட்டி யில் 6 விக்கெட்டுக்கள் வித்தியா சத் தில் இங்கிலாந்து அணியை வீழ்த் தியது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 5 டெஸ்ட், ஒரே ஒரு இருபது -20 மற்றும் 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடரை மேற்கிந்தியதீவுகள் அணி 1:0 என்ற கணக்கில் கைப்பற்றிய நிலையில் ஒரே ஒரு இருபது-20 போட்டி நேற்று முன்தினம் போர்ட் ஒப் ஸ்பெயினில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணித்தலைவர் ராம்டீன் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 19.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 121ஓட்டங்களை எடுத்தது.

இதில் டேவிஸ் 27, அணித் தலைவர் ஸ்ரொரஸ் 22 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்து வீச்சில் பென் 3 விக்கெட்டுக்களையும் எட்வோட்ஸ், பார்க்கர், சமி மற்றும் பிரவோ ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 122 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி சர்வானின் அதிரடியான அரைச்சதத்தின் மூலம் 18 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 123 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் ராம் நரேஷ் சர்வான் 46 பந்துகளில் (4பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 59 ஓட்டங்களையும் சிம்மோன்ஸ் ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களையும் எடுத்தனர்.



பந்து வீச்சில் கான் 2 விக்கெட்டுக்களையும் அன்டர்ஷன்,பிரோட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை யும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக மேற்கிந்தியத்தீவுகள் அணியின் வெற்றிக்கு திருப்பு முனையமைத்த சர்வான் தெரிவானார்.

# இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் இருவர் தொடர்ந்தும் வைத்தியசாலையில்



பாகிஸ்தானில் இடம்பெற்ற இலங்கை அணி வீரர்கள் மீதான துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் காயமடைந்த வீரர்களில் திலான் சமரவீர மற்றும் அஜந்த மெண்டிஸ் ஆகியோர் தொடர்ந்தும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில்சிகிச்சைபெற்று வருவதாக விளையாட்டுத்துறை அமைச்சின் மருத்துவப் பிரிவுப் பணிப்பாளர் கீத்தாஞ்சனமெண்டிஸ்தெரிவித்துள்ளார்.

அதேவேளை தரங்க பரணவிதானவின் மார்பு பகுதியிலிருந்து துப்பாக்கி ரவை அகற்றப்பட்டு சிகிச்சை பெற்றபின் வைத்தியசாலையிலிருந்து வெளியேறினார். அத்துடன் பிரித்தானிய பயிற்றுவிப்பாளரான போல் பார்பிரேஸும் சிகிச்சை முடிந்து சென்றுள்ளார்.

திலான் சமரவீரவின் காலில் காணப்பட்ட துப்பாக்கி ரவை அகற்றப்பட்டுள்ளதுடன் மெண்டிஸின் தலையில் ஏற்பட்ட காயம் போன்றவற்றால் இருவருக்கும் தீவிர கண்காணிப்பின் கீழ் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

அவர்கள் எதிர்வரும் வாரங்களில் வைத்தியசாலையிலிருந்து வெளியேறுவர் என கீத்தாஞ்சன மெண்டிஸ் தெரிவித்துள்ளதாக ஏ.எப்.பி.செய்தி வெளியிட்டுள்ளது.

### 3ஆவது சுற்றுக்கு நடால் முன்னேற்றம்

இண்டியன் வெல்சில் நடைபெறும் பி.என்.பி.பாரிபாஸ் ஓபன் டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயின் வீரர் ரபெல் நடாலும் செர்பிய வீரர் ஜொகோவிக்கும் 3 ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஜேர்மனி வீரர் மைக்கல் பெர்ரரை 6:2,6:1 என்ற செட் கணக்கில் 67 நிமிடங்களில் வீழ்த்தினார் நடால். ஆர்ஜென்டீனா வீரர் வஸ்ஸல்லோ ஆர்கெல்லோவை 7:5,6:4 என்ற செட்களில் வீழ்த்தினார் ஜொகோவிக்.

# ஐ.பி.எல். போட்டிகள் நடத்துவதில் இழுபறி

தேர்தல் நடக்கும் காலத்தில் ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிகள் நடத்துவதால் மத்திய பாதுகாப்புதர முடியாது என கைவிரிக்கப்பட்டது. போட்டித் திகதிகளை சம்பந்தப்பட்ட மாநிலங்களுடன் ஆலோசித்து மாற்றியமைக்குமாறு உள்துறை அமைச்சகம் பி.சி.சி.ஐக்கு பரிந்துரைத்துள்ளது. உள்துறை அமைச்சக அதிகாரிகளுடன் பி.சி.சி.ஐயின் மூத்த அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இப்போட்டி நடத்தாமல் இருந்தால் ஏற்படும் நஷ்டநிலை குறித்து எடுத்துக் கூறப்பட்டது.

இந்த ஆலோசனை கூட்டத்துக்கு பின்னர் பேசிய பி.சி.சி.ஐ அதிகாரி ஸ்ரீவஸ்தவா, ஐ.பி.எல். போட்டிகள் நடத்த புதிய அட்டவணை மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்து முடிவுசெய்யப்படும் எனத் தெரிவித்தார்.

# சம்பியன்ஸ் தொடர் தென்னாபிரிக்காவில்

## ஐ.சி.சி. அனுமதி

பாதுகாப்பு பிரச்சினை காரணமாக கடந்த ஆண்டு பாகிஸ்தானில் நடக்கவிருந்த மினி உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் (சம்பியன்ஸ் தொடர்) ஒத்திவைக்கப்பட்டது. இந்த ஆண்டு செப்ரம்பரில் பாகிஸ் தானில் நடை பெறுவதாக இருந்தது. இருப்பினும் உலகின் மற்ற அணிகள் அச்சம் தெரிவிக்க இலங்கைக்கு மாற்றப்பட்டது. இத் தொடர் குறித்து முக்கிய முடிவு எடுக்க ஐ.சி.சி தலைமை நிர்வாக அதிகாரிகள் கூட்டம் கடந்த வாரம் துபாயில் நடந்தது. இக்கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த இலங்கை கிரிக்கெட் சபை தொடர் நடக்க உள்ள செப்ரம்பர் மாதம் கொழும்பில் மழை பெய்ய அதிக வாய்ப்பு உள்ளதாக தெரிவித்தது.

இது தவிர பாதுகாப்புக்கும் உரிய உத்தரவாதம் அளிக்க வில்லை. இதனால்மினி உலகக் கோப்பை தொடர் இலங்கையிலிருந்து மாற்றப்பட்டுள்ளது. இதனால் வேறு இடத்திற்கு மாற்ற ஐ.சி.சி முயற்சி மேற் கொண்டது. இத் தொடரை நடத்த தென் ஆபிரிக்கா அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் விருப்பம் தெரிவித்தன. இதனையடுத்து நேற்று நடந்த கூட்டத்தில் மினி உலக கோப்பை தொடரை வெற்றிகரமாக நடத்த தென் ஆபிரிக்காவுக்கு ஐ.சி.சி அனுமதி அளித்துள்ளது.

## 2012 ஆம் ஆண்டு தொடக்கம்

# ஆஸி:- தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் ஒவ்வொரு ஆண்டிலும் டெஸ்ட்,ஒருநாள் தொடர்கள்

2012ஆம்ஆண்டு தொடக்கம் அவுஸ்திரேலிய, தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையில் ஒவ்வொரு ஆண்டிலும் டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர்களை நடத்த இரு நாட்டு கிரிக்கெட் சபைகளும் தீர்மானித்துள்ளன.

இதன்மூலம் ஒரேஆண்டில் இரண்டு அணிகளுக்கும் இடையில் தொடர்ச்சியாக இரண்டு டெஸ்ட் தொடர்கள் நடைபெறுவதை தவிர்த்துக் கொள்ளலாம் என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை தலைவர் ஜெரால்ட் மஜோலா தெரிவித்தார். இதன்படி 2012 ஆம் ஆண்டு தொடக்கம் இரு நாடுகளுக்கும் இடையில் ஒவ்வொரு ஆண்டிலும் 4 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடை பெறவுள்ளதோடு ஒரு நாள் தொடர் 5 போட்டிகளைக் கொண்டதாக அமையவுள்ளது. எனினும் ஒரு நாள்மற்றும் டெஸ்ட் தொடர்கள் வேறு வேறாகவே நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த டெஸ்ட் மற்றும் ஒரு நாள் தொடர்களை இருநாடுகளும் ஒவ்வொரு ஆண்டிலும்மாறி மாறி நடத்தத் தீர் மானித்துள்ளன.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 35





இந்நிலையில் 1995ஆம் ஆண்டு ஏப்ரல் 11ஆம் திகதி நடைபெற்ற தொடரில் 6ஆவது போட்டியில் பாகிஸ்தான் அணியுடன் இலங்கை மோதியது.

இப்போட்டியில் முரளிதரன் சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை யிழந்து 178 ஓட்டங்களை எடுத்தது.

இதில் முரளிதரன் 10 ஓவர்கள் பந்து வீசி 42 ஓட்டங்களைக்கொடுத்து நயீம் அஸ்ரப்பை (16) ஆட்டமிழப்புச் செய்து ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 30.5 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 180 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரின் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

இதன் மூலம் 1995ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் திகதி நடைபெற்ற இறுதிப்போட்டியில் இலங்கை அணி இந்தியாவுடன் மோதியது. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்ற பெற்ற இந்திய அணி முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தது.


பாலா

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 230 ஓட்டங்களை எடுத்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 41.5 ஓவர்களில் இரண்டுவிக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 233 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

இதில் முரளிதரன் 10ஓவர்கள் பந்து வீசி 46 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்த போதும் விக்கெட் எதனையும் கைப் பற்றாமல் ஏமாற்றம் அளித்தார். இந்தத் தொடரைத் தொடர்ந்து இலங்கை அணிக்கு 4 மாத கால ஓய்வு கிடைத்தது.


(பயணிக்கும்)

# எண் விளையாட்டு -40



**போட்டிவிதிகள்:** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்ளில் நிரப்பப்படும்எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சமமாகவர வேண்டும். இடமிருந்து வலமாகசெல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப் புறம் கொடுக்கப்பட்டுள்ளது. 1 முதல் 9 வரையான எண்களை பயன் படுத்த வேண்டும். ஆனால் ஒருவரிசையில் பயன்படுத்தியஎண்திரும்பவரக் கூடாது.

நேற்றைய பகுதிக்கான விடை



# 700 மெ.தொன் பொருட்களுடன் கப்பல் புதுமாத்தளனுக்கு நேற்றுப் புறப்பட்டது

முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்திலுள்ள மக்களுக்கென 700 மெற்றிக் தொன் அத்தியாவசிய உணவுப் பொருட்களை ஏற்றிக் கொண்டு எம்.வி பின்டான் சரக்குக் கப்பல் நேற்று திருகோணமலையிலிருந்து புதுமாத்தளன் நோக்கி புறப்பட்டுள்ளது.

கடந்த வாரம் புதுமாத்தளன் பிரதேத்தில் பொருட்களை இறக்கிக் கொண்டிருக்கும் போது புலிகள் நடத்திய மோட்டார் தாக்குதல்களுக்குப் பின்னர் பின்டான் சரக்குக் கப்பல் போதிய பாதுகாப்புடன் நேற்று இரண்டாவது தடவையாக புதுமாத்தளன் நோக்கி புறப்பட்டுச் செல்வதாக கடற்படைப் பேச்சாளர் கப்டன் டி.கே.பி.தஸநாயக்க தெரிவித்தார்.

முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்திலுள்ள மக்களுக்கு விநியோகிக்கவென அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலகம் வழங்கிய 500 மெற்றிக் தொன் உணவுப் பொருட்களை கடந்த 7ஆம் திகதி ஏற்றிச் சென்ற பின்டான் சரக்குக் கப்பல் கடந்த 9 ஆம் திகதி புதுமாத்தளன் கடற்பரப்பில் வைத்து பொருட்களை இறக்கிக் கொண்டிருக்கும்போது புலிகள் மோட்டார் தாக்குதலை நடத்தினர்.

500 மெற்றிக் தொன் பொருட்களில் சுமார் 142 மெற்றிக் தொன் பொருட்களை இறக்கியிருந்த வேளையிலேயே புலிகள் நடத்திய மோட்டார் தாக்குதலையடுத்து அக்கப்பல் பாதுகாப்பு நிமித்தம் உடனடியாக ஆழ் கடலை நோக்கி எடுத்துச் செல்லப்பட்டது.

பின்னர் திருகோணமலைத் துறைமுகத்தை நோக்கி திரும்பிய இக்கப்பல் கடந்த வெள்ளியன்று மீண்டும் புதுமாத்தளன் நோக்கிச் சென்று பொருட்களை இறக்கியது.

இதனையடுத்து புதுமாத்தளனில் இருந்து திருமலை நோக்கி திரும்பிய அந்தக் கப்பல் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரின் அலுவலகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் 700 மெற்றிக் தொன் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் ஏற்பட்டுள்ளன என்றார்.

(ச-5)

## வடக்கு கிழக்கு மக்கள் தம்மை பதிய வேண்டும்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்து கொழும்பில் தற்காலிகமாக வாழ்ந்துவரும் மக்கள் அனைவரையும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்கு முன் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் ஊடக பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்துள்ளார்.

தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அவ்வாறு பதிவு செய்யாதவர்கள் கைது செய்யப்படுவர் எனவும் பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ச-5)

## ஈழத்தமிழர் படுகொலை...

தமிழர்கள் படுகொலை செய்யப் படுவதை எண்ணி சில நாட்களாகவே வேதனைப்பட்டு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

ஒரு கட்டத்தில் ஈழத் தமிழருக்காகத் தீக்குளிக்கப் போவதாக இராஜசேகர் கூறியிருக்கிறார். இதனைக் கேட்டு அதிர்ச்சியடைந்த அவரின் தாய் ரோகம்மா மகனுக்கு ஆறுதல் கூறியதுடன் தீக்குளிக்கும் எண்ணத்தை கைவிடும்படி கூறியிருக்கிறார்

ஆனால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் இராஜசேகர் தனது வீட்டு வாசலின் முன்பாக உடல் முழுவதும் மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துக் கொண்டார்.

இதனால் அவரின் உடல் முழுவதும் எரிந்து கருகியது. உயிருக்கு ஆபத்தான நிலையில் தஞ்சை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இராஜசேகர் சேர்க்கப்பட்டார். இவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தீக்குளித்த இராஜசேகர் ஒரு குழந்தையின் தந்தை ஆவார்.

ஈழத் தமிழருக்காக தீக் குளித்த இன்னொருவரின் பெயர் ஆனந்த். வயது 23. கடலூரை அடுத்த அன்னவெளி சிற்றூரை சேர்ந்த நாகலிங்கம் என்பவரின் மகனான இவர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தொண்டராக உள்ளார்.

நேற்று முன்தினம் மாலை திடீரென தனது வீட்டிற்கு வெளியே நடுத் தெருவில் நின்றபடி இலங்கைத் தமிழர்கள் வாழ்க என்றும் இலங்கையில் போரை நிறுத்த வேண்டும் என்றும் ஆவேசமாக முழக்கமிட்டபடியே உடலில் மண்ணெண்ணெயை ஊற்றி தீ வைத்துக்கொண்டார்.

இவர் தீயிட்டுக் கொள்வதைத் தடுக்க பலர் முயற்சித்த போதிலும் அவர்களை எல்லாம் தள்ளி விட்டு விட்டு கண்ணிமைக்கும் நேரத்தில் தீயிட்டுக்கொண்டார். உடல் கருகிய நிலையில் மயங்கி விழுந்த அவரை அப்பகுதி மக்கள் கடலூர் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது,

ஆனந்த், இராசசேகரன் ஆகிய இருவருக்கும் 99 விழுக்காடு தீக்காயம் ஏற்பட்டிருப்பதால் அவர்களின் உடல் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் பேரை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி கொளத்தூர் முத்துக்குமார், பள்ளப்பட்டி ரவி, சீர்காழி ரவிச்சந்திரன், சென்னை அமரேசன், சிவப்பிரகாசம், சிறீதர் என்கிற எழில்வளவன், கடலூர் தமிழ்வேந்தன், சிவகாசி. கோகுலரத்தினம், வாணியம்பாடி வள்ளப்பட்டு சீனிவாசன் ஆகிய 9 பேர் தீக்குளித்து உயிர் நீத்தனர். அவர்களை தொடர்ந்து கடலூர் ஆனந்தும் தத்தனூர் கீழவிழியைச் சேர்ந்த இராசசேகரும் தீக்குளித்திருக்கின்றனர். (ச-5)

## இரண்டு...

400 பொதுமக்கள் நேற்று முன்தினம் காலை புதுக்குடியிருப்பு அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள உறவினர்களிடம் வந்து சேர்ந்திருப்பதாக பிரிகேடியர் நாணயக்கார கூறினார்: புதுக்குடியிருப்பு மற்றும் புதுமாத்தளன் ஆகிய பகுதிகளிலிருந்து கடந்த சனிக்கிழமை ஆயிரத்து 15 பொதுமக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதி நோக்கி வந்துள்ளனர் எனவும் அவர் கூறினார். (ச-5)

## சித்திரைப் புத்தாண்டுக்கு...

ஏ-9 வீதியை புனரமைக்க பிரான்ஸ் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன உதவிகளை வழங்குவதாக உறுதியளித்துள்ளன என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

ஏ-9 வீதி மக்கள் பாவனைக்காக எப்போது திறக்கப்படும் என்று வினவியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அமைச்சர் மேலும் கூறியதாவது,

ஏ-9 வீதியை எதிர்வரும் தமிழ்-சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் மக்களின் பாவனைக்காக திறப்பதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

தற்போதைய நிலைமையில் பாதையின் இரு மருங்கிலும் 5 மீற்றர் தூரத்திற்கு நிலக்கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் பாதுகாப்பு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பான அறிக்கை பாதுகாப்பு அமைச்சிலிருந்து கிடைக்கப்பெற்றதும் வீதியைத் திறப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வோம்.

ஆனால் இதுவரை பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை கிடைக்கவில்லை. இந்த வீதி இராணுவப் போக்குவரத்துக்காக அண்மையில் திறக்கப்பட்டது.

இது அபிவிருத்தி அதிகார சபையின் கீழ்வருகின்ற வீதியாகும். இந்நிலையில் வீதியின் குறிப்பிட்ட பிரதேசங்களில் பெயர்ப் பலகைகள் அமைக்கப்படும். இதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. இதேவேளை ஏ-9 வீதியை புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்காக வெளிநாட்டு உதவிகள் கிடைக்கவுள்ளன. இவ்விடயம் தொடர்பில் உதவிகளை வழங்குவதற்கு பிரான்ஸ் தூதுவர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பான நடவடிக்கைகள் முறைப்படி இடம்பெறும். அத்துடன் ஆசிய அபிவிருத்தி வங்கியும் நிதி உதவி செய்வதற்கு முன் வந்துள்ளது என்றார்.

(ச-5)


**விற்பனைக்கு**

சன்ரெல் தொலைபேசி விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு:- 0776006506

(2400)


## ஐ.நாவின் அறிக்கை...

இலங்கை அரசாங்கம் தனது எதிர்ப்பை தெரிவித்துள்ள போதும் இலங்கையின் வட பகுதியில் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பாக நாம் வெளியிட்ட அறிக்கை சரியானதே.

அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட, கொல்லப்பட்ட பொதுமக்கள் தொடர்பான தகவல்களை பலதரப்பு தகவல்களுடன் ஒப்பிட்ட பின்னரே அறிக்கை வெளியிடப்பட்டது.

எனவே கடந்த வெள்ளிக்கிழமை எமது அலுவலகம் வெளியிட்ட தகவல் சரியானது என்றார் அவர்.

இதேவேளை இலங்கையின் மனித உரிமைகள் அமைச்சின் செயலாளரும் அரசாங்க சமாதான செயலக பணியாளருமான ரஜீவ விஜேயசிங்க நேற்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் துறை ஆணையாளர் நவநீதம் பிள்ளையை சந்தித்துள்ளார்.

வன்னியில் படையினரால் 2 ஆயிரத்து 800 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் 7 ஆயிரம் பேர் காயமடைந்துள்ளதாகவும் நம்பத்தகுந்த தகவல்கள் கிடைத்துள்ளதாக நவநீதம்பிள்ளை கடந்த வெள்ளிக்கிழமையன்று ஐக்கிய நாடுகள் சபையின் செய்தியாளர் மாநாட்டின் போது குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்த குற்றச்சாட்டை அடுத்து நேற்று முன்தினம் மனித உரிமைகள்துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க மறுப்பை வெளியிட்டிருந்தார்.

இந்த மறுப்பை நேரடியாக வெளியிடும் வகையிலேயே அமைச்சின் செயலாளர் நேற்று நவநீதம்பிள்ளையை ஜெனீவாவில் வைத்து சந்தித்தார். (ச-5)

## 20 தமிழ்...

உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்களும் யுவதிகளும் அந்தப் பிரதேச பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சிலர் கொழும்பு தெமட்டகொடயில் உள்ள குற்றத்தடுப்பு அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அதேவேளையில் கொழும்பின் புறநகர்ப் பகுதியான கம்பஹா, நீர்கொழும்பு, மினுவாங்கொட மற்றும் களுபோவில, பாணந்துறை, களுத்துறை ஆகிய இடங்களிலும் சோதனை நடவடிக்கைகள் இடம் பெற்றன.

கொழும்பிலும் அதனை சூழவுள்ள பகுதிகளிலும் நாளுக்குநாள் தேடுதல், சோதனை நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு கோட்டை, புறக்கோட்டை ஆகிய வர்த்தக நகரங்களில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேடுதலில் 5 மலையக இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச-5)

## காங்கேசன்...

பல்கலைக் கழகத்திற்கு வருவதற்காக திருகோணமலையில் காத்திருக்கும் வெளி மாவட்ட மாணவர்கள் கப்பல் சேவை இடம் பெறாததால் தமது கல்வி நடவடிக்கைகள் பாதிப்படைந்ததோடு கொண்டு வந்த பணமும் செலவடைந்த நிலையில் தாம் பெரும் துன்பத்திற்கு முகம் கொடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தேசிய மட்ட தமிழ்த் தின போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்களும் கொழும்புக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(ச-5)

## இந்து அமைப்...

நல்லை ஆதீன முதல்வர், இந்து குருமார் ஒன்றியப் பிரதிநிதிகள், இந்து அமைப்புக்களின் ஒன்றியத்தின் செயலாளர் எஸ்.பரமநாதன், பொருளாளர் சீ.வீ.கே.சிவஞானம், சர்வோதய இணைப்பாளர் எஸ்.சிவசுப்பிரமணியம், வணிகர் கழக பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை குறித்த உதவிப் பொருட்களை வழங்குவதற்காக இந்து அமைப்புக்களின் ஒன்றிய பிரதிநிதிகள் நலன்புரி நிலையங்களுக்குச் செல்வதற்கான அனுமதியை பலாலி படைத் தளபதி வழங்கியுள்ளதாக யாழ்.அரச அதிபர் தெரிவித்தார்.

(ந)

## இரு நாட்களில் 73 பொது...

பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 127 பேர் காயமடைந் துள்ளனர்.

சீ.ரஞ்சன் (வயது 36), பே.நல்லசாமி (வயது 65), ம.தெய்வேந்திரராசா (வயது 42), ஜெ.ஜோதிகா (வயது 7), உ.யோகேஸ்வரன் (வயது 10), ச.மகாலிங்கம் (வயது 45), ச.அமிர்தலிங்கம் (வயது 61), வ.லக்ஸ்சுமணன் (வயது 60), வி.யோகநாதன் (வயது 40), சகோதரர்களான கு.தமிழினி (வயது 22), கு.தபேந்தினி (வயது 14), கு.தமிழ்குமரன் (வயது 11) மற்றும் த.சிறிதரன் (வயது 23), ச.மேரி (வயது 73), ச.யேசு (வயது 36), வ.லோகநாதன் (வயது 30),

மோ.தேவி (வயது 39), மோ.தரணி (வயது 12), ச.மகாலிங்கம் (வயது 48), ம.மைதிலி (வயது 7), மோ.தேவி (வயது 38), மோ.சாருலதா (5 மாதக்குழந்தை), சி.கேசவன் (வயது 6), ம.சூசைதாசன் (வயது 62) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது உயிரிழந்துள்ளனர்.

இவர்களில் நால்வரின் உடலங்கள் அடையாளம் காணப்படவில்லை. ஏனையோரின் பெயர் விபரம் வெளியாகவில்லை.

இவர்களில் அதிகமானவர்கள் மாத்தளன் பகுதியில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்த 127 பேரில் 20 பேர் மாத்தளன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளையில் மக்கள் பாதுகாப்பு வலய பகுதியான மாத்தளன் பகுதியில் கடந்த 14ஆம் திகதி எறிகணைகள் வீழ்ந்து வெடித்துள்ளன. இதில் 11 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் பெருமளவிலானோர் காயமடைந்துள்ளனர்.

அ.தங்கேஸ்வரன் (வயது 39), க.சிறிதரன் (வயது 49), கு.தர்மேந்தினி (வயது 14). செ.மனோகரன் (வயது 56), தமிழ்க்குமரன் (வயது 15), இளங்கோ (வயது 35), சி.புண்ணியசிங்கம் (வயது 58), வீ.சுந்தரலிங்கம் (வயது 52) ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

இவர்களில் கொல்லப்பட்ட மூவரின் உடலங்கள் அடையாளம் காணப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-1)

## முல்லைத்தீவிலிருந்து...

கர்ப்பிணிப்பெண்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் என 440 பேர் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப் பட்டுள்ளனர்.

இதேவேளை இந்தக் கப்பல் நேற்றுமாலை புல்மோட்டையைச் சென்றடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனப் பிரதிநிதிகளும் முல்லைத்தீவிலிருந்து கொண்டு செல்லப்பட்டவர்களுக்கான உதவிகளை வழங்கும்பொருட்டு புல்மோட்டைக்கு சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை புல்மோட்டைக்கு கப்பல் மூலம் கொண்டு செல்லப்படுபவர்களிற்கான மருத்துவ உதவி மற்றும் அவர்களிற்கான பிற உதவிகளை நெறிப்படுத்தி வழங்கும் வகையில் குச்சவெளிப் பிரதேச செயலகத்தின் உப அலுவலகம் ஒன்றும் புல்மோட்டையில் உருவாக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் இந்த அலுவலகம் செயற்படத் தொடங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-14)

## புலிகள் தோற்கடிக்கப்...

தமிழ் மக்களுக்கு ஜனநாயகத்தைப் பெற்றுக் கொடுத்து அவர்களுக்கு பேசும் உரிமையைப் பெற்றுக் கொடுத்து, உண்மையான பிரச்சினைகள் குறித்து அவர்களைப் பேசவிடாது, தீர்வுஒன்றை அவர்கள் மீது சுமத்துவது நியாயமற்றது.

அவர்கள் பல வருடங்களாக கடுமையான ஆட்சிக்கு உட்பட்டிருந்தனர். ஜனநாயகம், வாக்குரிமை குறித்து அவர்கள் அறிந்திருக்கவில்லை. அந்த சூழலை உருவாக்கி தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் குறித்து பேச வாய்ப்பளிக்கப்படவேண்டும் எனவும் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

தீர்வுத்திட்டத்தை வழங்கும் முன்னர் பிரச்சினை என்ன என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களுக்கு பேசும் உரிமையில்லாது, அவர்கள் தங்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்து கொள்ள சுதந்திரம் வழங்காது, தீர்வுத் திட்டத்தை வழங்கினால் மீண்டும் பழைய இடத்திற்கே செல்லவேண்டியிருக்கும் என பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.03.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.